# அண்ணாதுரையின் படங்களை ராணுவத்தினர் கைப்பற்றினர்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 4

தொலைபேசி அலு. 49 இதழ் 346
போன் 889 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க தை 11 ஷவ்வால் 24 வியாழக்கிழமை (25-1-68)

நல்லூர். புதன் தமிழக முதலமைச்சர் திரு. ஸி. என். அண்ணாதுரையின் படங்களைக் கொண்ட 3 கட்டுகளை வல்வெட்டித்துறை கடற்கரையில் ராணுவத்தினர் கைப்பற்றியதாக அறியப்படுகிறது. இன்று அதிகாலை 12-30 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்கரையில் கடத்த முயன்றபோதே இவைகளை ராணுவத்தினர் கைப்பற்றினர்கள்.

இந்தியாவிலிருந்து இந்தப்படங்கள் கடத்தப்பட்டதாக ராணுவத்தினர் கருதுகின்றனர்.

அழகிய கிளேஸ் பேப்பர்களில் அடிக்கப்பட்ட திரு. அண்ணாதுரையின் மூவர்ணப்படங்கள் இந்த கட்டுக்களில் அடங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

சுங்க இலாகாவினரிடம் இந்த மூன்று கட்டு அண்ணாதுரையின் படங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து புலன் விசாரணை நடைபெறுகிறது.

# திருமலை சுதந்திர தினவிழாவுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

## தனித்து இயங்குவதா என்பதை ஆராயும்

யாழ்ப்பாணம், வியா. தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறித் தனித்து இயங்குவதா இல்லையா என்பது பற்றி பெப்ரவரி 1-ம் திகதி தமிழரசு வாலிப முன்னணி யாழ்ப்பாணத்தில் கூடி தீர்மானிக்குமெனத் தெரிய வருகிறது.

இக்கூட்டத்தில் தமிழரசு வாலிப முன்னணி தலைவர் திரு. கி. இராசதுரை நிச்சயம் கலந்துகொள்வாரென்று வாலிபமுன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பெப்ரவரி 4-ம் திகதி நடைபெறும் சுதந்திர தின விழாவை பகிஷ்கரிப்பதா? இல்லையா? என்பது பற்றியும் இக் கூட்டத்தில் வாலிப முன்னணியினர் முடிவு செய்வார்களாம்.

தமிழரசுக் கட்சி தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்டசபை மசோதா பற்றி விளக்கம் கூறுவார்கள் எனத் தெரிய வருகிறது.

## "கட்சியிலிருந்து வெளியேறுவது புத்திசாலித்தனமான தல்ல"

யாழ்ப்பாணம் வியா. தமிழரசுக் கட்சியிலிருந்து வாலிப முன்னணி அவசரப்பட்டு வெளியேறினால் அதனால் ஏற்படும் விளைவுகள் தமிழ்பேசும் மக்களை அதிகம் பாதிக்கும். வாலிப முன்னணி அவசரப்பட்டு எடுக்கும் நடவடிக்கை எதுவும் பலனளிக்க மாட்டாது.

ஆவரங்கால் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி செயலாளர் திரு வே. கணபதிப்பிள்ளை விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது:

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி இம்மாதம் 28-ம் திகதி கூடி தலைமைப் பீடத்திலிருந்து விலகுவதா? இல்லையா? என்பது பற்றி ஆலோசிக்கவிருக்கிறது. தமிழரசுக் கட்சியிலிருந்து வாலிப முன்னணி விலகுவதென்பது புத்திசாலித்தனமான தலல.

தமிழ் பேசும் மக்களை காலத்திற்கு காலம் ஒவ்வொரு இயக்கமும் பிரிந்து சிதறவைக்கும் நிலையைக் கண்டு தமிழ் மக்கள் கட்சிகளிடம் வெறுப்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

## யாழ். நகர் திருட்டு

## பொலிஸ் நாய்கள் மோப்பம்: எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், வியாழன் யாழ். நகர மத்தியிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற களவை துப்புதுலக்க இரண்டு துப்பறியும் பொலிஸ் நாய்கள் நேற்றுக் காலை கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன. 'பிறேஸ்', 'பிக்கல்' என்ற இரண்டு துப்பறியும் பொலிஸ் நாய்களும் நேற்று சுமார் 3 மணி நேரம் களவு நடந்த இடத்தை மோப்பம் பிடித்தன. களவு நடைபெற்ற இடத்தில் கிடந்த கிழிந்த சீலைத்துண்டு ஒன்றையும், இரும்புத் துண்டு ஒன்றையும் இந்த நாய்கள் மோப்பம் பிடித்தபோதிலும் எவரையும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

திருட்டு நடைபெற்ற நேரத்திலிருந்து நாய்கள் இங்கு வரவழைக்கப்பட்டதில் தாமதம் ஏற்பட்டதே இதற்குக் காரணம் என நாய்களுடன் வந்திருந்த பொலிஸ் அதிகாரியொருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## முற்றவெளியில் அணிவகுப்பு; 'டொக்யார்டுக்குள்' இதர நிகழ்ச்சிகள்

### பிரதமர், கவர்னர்ஜெனரல் கலந்துகொள்வர்

— நமது நிருபர் எஸ் திருச்செல்வம் —

யாழ்ப்பாணம், வியா. திருகோணமலையில் அடுத்தமாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கும் சுதந்திரதினவிழாவை மிகவும் கோலாகலமாகக் கொண்டாட வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான வேலைகளை திருமலை அரசாங்க அதிபர் திரு. எஸ். குணநீரா கவனித்து வருகின்றார்.

### 1000 பொலிஸார்

சுதந்திரதின விழாவை முன்னிட்டு திருமலையில் கடமையாற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தனவின் உத்தரவின் பேரில நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 1000பொலிஸார் இங்கு விசேஷமாக அனுப்பிவைக்கப் படுவர். இதற்கு வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகளை வட மத்திய மாகாண பொலிஸ் சுப்பிரின்டன்ட்திரு. தனபாலாவும், திருமலை உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு அபயசேகராவும் கவனித்து வருகின்றார்கள்.

### டொக்யாட்டுக்குள்

அன்றையதினம் நடைபெறும் நிகழ்ச்சிகளில் அணிவகுப்பு மாத்திரம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறுமென்றும் மற்றைய சகல நிகழ்ச்சிகளும் 'டொக்யாட்டுக்குள்ளேயே நடைபெறுமென்றும் தெரிய வருகிறது. அணிவகுப்பு நிகழ்ச்சியில் பொலிஸாருடனும், இராணுவத்தினருடனும் கல்லூரி மாணவமாண

(8-ம் பக்கம்பார்க்க)

## கட்சிசார்பில் போட்டியிடவில்லை

யாழ்ப்பாணம், வியாழன் சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எவரும் போட்டியிட வில்லையென சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் தெரிவித்தார் இது பற்றி சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் தவறென்றும் இவர் குறிப்பிட்டார்.

## திரு. குமாரசாமி காலமானார்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணப் பகுதி மாவட்ட நீதிபதியாகவும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகவும், இந்தியாவில் இலங்கையின் ஹைகமிஷனராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. ஸி குமாரசாமி நேற்றுக்காலை கொழும்பில் மரணமானார். அன்னாரது இறுதிச் சடங்குகள் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து பல அரசாங்கஅதிகாரிகளும், பிரமுகர்களும், வழக்கறிஞர்களும் நேற்று கொழும்புசென்றனர்.

[சா. நி.]

கடைக்குள்ளிருந்து ஆயிரக்கணக்கான ரூபா களவாடப்பட்டுள்ளதாகப் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றத் தடுப்புப பகுதி இன்ஸ்பெக்டர் திரு மென்டிஸ் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி தொடர்ந்து புலன்விசாரணை செய்து வருகின்றது.

[சா. நி.]

## ஒரே நேரத்தில் கல்வி போதனை

கொழும்பு, புதன் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ இரியகொல்லை, கொழும்பும் அதைச் சேர்ந்ததுமான பகுதிகளில் இருந்து வந்த ஆண், பெண் தனி வகுப்பு முறையை மாற்றி யாவரும் ஒரே நேரத்தில் கல்வி பயிலுமாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்

## செயித் துறைமுகத்தில ரஷ்ய போர்க்கப்பல்கள்

### இஸ்ரேல் — ஐ. அ. கு. கைதிப்பரிமாறல் முடிந்தது

கெயிரோ, ஜன. 24 சோவியத் போர்க்கப்பல்கள் நான்கு, நேற்று செயித் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன. கடந்த வருடம் ஜூன் மாதம், அரபு—இஸ்ரேல் போர் நடந்த காலந்தொட்டு, சோவியத்போர்க் கப்பல்கள் கிரமமாக ஐக்கியஅரபுக்குடியரசுத் துறைமுகங்களுக்கு விஜயம்செய்து வருகின்றன.

இதற்கிடையில், இஸ்ரேலின் ஆட்சேபனையையும் பொருட்படுத்தாது, அடுத்த சனிக்கிழமையிலிருந்து சூயஸ்கால்வாயில் அகப்பட்டுள்ள 16 வெளிநாட்டுக் கப்பல்களையும் விடுவிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதென ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுசெய்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், இஸ்ரேலும் ஐ. அ. கு வும் தமக்கிடையேயான போர்க் கைதிகள் பரிமாறலை முடித்துக் கொண்டுள்ளன. இஸ்ரேல், 4481 ஐ. அ. கு. கைதிகளை ஐ. அ. கு.விடம் அளித்துள்ளது. ஐ. அ. கு. 10 இஸ்ரேலிய கைதிகளை இஸ்ரேலிடம் கொடுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### WANTED

Wanted a Clerk for an Engineering Establishment in Jaffna. Applicants should be with G. C. E. (O. L) with credit pass in Arithmetic or Mathematics. Past experience would be an added qualification. Salary & Allowance Rs. 100/- per mensum. Please apply before 30-1-68 to No. 18 6 C/o Eelanadu Jaffna. 1816

Wanted a Bill Collector to work on an Attractive Commission Basis for a long Established Firm in Jaffna. Persons with Adequate Experience who could pay cash security of Rs. 500/- only need apply with two very recent testimonials before 30-1 68 to No. 1817 C/o Eelanadu, Jaffna. 1817

### தேவை

அங்கத்தவர்களைச் சேர்க்கக் கூடிய பிரதிநிதிகளும் ஒரு லிகிதரும் தேவை. சம்பளம் 50/- கொமிசனும் உண்டு. முத்திரை ஒட்டிய முகவரி எழுதிய உறையுடன் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, தலைவாணிச் சங்கம், 274, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1821

விற்பனையாளர்கள்:

ஆண், பெண் விற்பனையாளர்கள் நேரில் சந்திக்கவும். ராஜா இண்டஸ்றீஸ், புத்தூர். 1822

இளைஞர்கள்:

வீடுகளுக்கு சைக்கிளில் சுவெப்ஸ்சோடா, ரோறஸ் தேயிலை விற்பனை செய்வதற்கு இளைஞர்கள் உடனே தேவை. நேரில் வரவும். நந்தி இண்டஸ்றீஸ், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1806

### தேவை

அராலி கிழக்கு ஐயனார் ஐக்கிய பண்டகசாலைக்கு மனேஜர் தேவை. வயது 25—40 இடைப்பட்டவர் ஐக்கியகலாசாலையிற் பயிற்சி பெற்றவர் பிணைப்பணம் ரொக்கம் 1000 ரூபாய். சம்பளம் 100 ரூபா 8-2-68க்கு முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். கௌரவ காரியதரிசி, அ. பாலசிங்க நாயகம். 1818

அனுபவம் வாய்ந்த பெண் நெசவாளர்கள் தேவை விடுதி வசதியுண்டு. தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்: எஸ் செல்வரத்தினம், செல்வம்ஸ் நெசவு நிலையம், 'சுந்தரவாசம்', களபூமி, காரைநகர். 1815

### விற்பனைக்கு

ரேப் றெக்கோடர்:

ஒரு றெலிபன்கன் மெயின் ரேப்றெக்கோடர் உடனடியாக விற்பனைக்குண்டு. (4 Track 2 Speed) விலை ரூபா 1400/- வ. கருணாநந்தம், 14, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1823

### கல்வி

கடந்த 46 வருடங்களாக ஆங்கிலச் சுருக்கெழுத்தைக் கற்பிப்பவரும் இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தை முதலாகக் கற்பிக்க ஆரம்பித்தவரும், ஆங்கில, தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சையும், சுருக்கெழுத்துமூலம் ஆங்கில பாஷையையும் நுட்பமான முறையில் குறுகிய காலத்தில் இருபாலாருக்கும் கற்பிக்கின்றார். விடுதிவசதியுண்டு. 1-2-68க்கு முன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1820

## 'கடல் தொழில் அபிவிருத்திக்கு நவீன உபகரணம் பெற முயற்சி

### யாழ்ப்பாண மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம்

உடுவில், புதன்

"கடற்றொழில் அபிவிருத்திக்கு மிக இன்றியமையாததாக கருதப்படும் "எயர் போய்" என்னும் நவநாகரீகமான உபகரணம் கனடா தேசத்திலிருந்து தருவிக்கப்பட்டு வட இலங்கைக் கடற்றொழிலாளருக்கு வழங்கப்படவேண்டும்" என்று நேற்றுப்பகல் யாழ்ப்பாணத்திலிலுள்ள அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையை யாழ்ப்பாணமாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை கொண்டு வந்தார், மேற்படி கூட்டத்துக்கு தலைமை வகித்த யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா பிரேரணையை அனுவதித்தார். பிரேரணை ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணை சம்பந்தமாக உதவி அரசாங்க அதிபர் குறிப்பிடுகையில் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் முத்து, சங்கு, கடலட்டை குளிப்பவர்கள் இன்றும் பழைய முறைகளைத்தான் கையாண்டு வருகிறார்கள். இம்முறைகளினால் தொழிலாளருக்கு மிகுந்த ஆபத்தும், கஷ்டங்களும் ஏற்படும் அதேவேளையில் மேற்படி தொழிலில் மந்த நிலையுப ஏற்படுகின்றது. கனடா தேசத்திலிருந்து தருவிக்கப்படவிருக்கும் இக்கருவி ஒன்றின் விலை 1 500 ரூபாவாகும். இவ்வுபகரணத்தைதருவித்து தொழிலாளருக்கு வழங்குவதால் அவ்வுபகரண உதவியோடு அவர்கள் கடலின் ஆழத்தில் சுமார் ஒரு மணி இரண்டு மணி நேரம் வரையில் தங்கியிருந்து சங்கு, முத்து, கடலட்டை முதலியவைகளை மிக இலகுவாக சேகரிக்கலாம்.

இவ்வுபகரணமின்றி ஆழ் கடலில் இரண்டு, மூன்று நிமிஷத்துக்குமேல் தங்கியிருக்கமுடியாது, எனவே இவ்வுபகரணம் தருவிக்கப்படுவதால் தொழிலாளர் கஷ்டம், ஆபத்து நீங்குவதோடு வடமாகாண கடற்றொழில் அபிவிருத்தியில் துரித முன்னேற்றமும் காணப்படும்.

"ஏயர் போய்" என்ற மேற்படி உபகரணத்தை இறக்குமதி செய்வதற்கு வேண்டிய உத்தரவையும், பணவசதியையும் வட இலங்கை கடற்றொழில் சேவா கூட்டுறவு சமாசத்துக்கு வழக்கப்படவேண்டும் என்றும் நேற்றுநடைபெற்ற இக்கூட்டத்தில் முடிவு செய்யபபட்டது.

### இனும்

மில்க்வைற் பார் சோப் மேலுறை ஒன்று தபாலில் அனுப்பி வைத்தால் பொக்கட் போயா கலண்டர் இனுமாக அனுப்பி வைக்கப்படும். விற்பனை வானிலும் அல்லது தொழிற்சாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, 527, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம். 1819

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
Charlie Drake
in
SANDS OF THE DESERT
(Technicolor)

REGAL JAFFNA
Daily at
4-30, 7-00 & 9-45 p.m.
Yul Brynner
in
Taras Bulba

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
5வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

## ஏன் இந்த இறக்குமதி?

கொழும்பு, புதன்

உள்ளூரிலிருக்கும் ஆயுர்வேத வைத்தியத்திற்குள் தேவையான மருந்துகள் வெளிநாடுகளிலிருந்து பெருவாரியாக இறக்குமதி செய்யப்படுவதற்கான காரணம் என்னவென்பது தெரியவில்லையென சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்,

இந்த மருந்துகள் அதிக விலைகொடுத்து வாங்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளதாம்.

இலங்கைப் பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குக் கையாளப்படும் தந்திரங்களில் இதுவுமொன்றுவென இப்போது சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

## புதிய அதிகாரம்

கொழும்பு, புதன்

உதவி மேயர்கள் வெறும் பெயரளவில் மாத்திரம் இயங்காமல் அவர்களுக்கும் அதிகாரம் வழங்க உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறார்.

மேயர் நாட்டை விட்டு வெளியே சென்றிருக்கும் சமயத்தில் உதவி மேயருக்கு மேயருக்கிருக்கும் சகல அதிகாரமும் இதன் படி வழங்கப் படவிருக்கிறது.

இதற்காக மாநகரசபை சட்டம் விரைவில் திருத்தியமைக்கப்பட விருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஷண்முக அர்ச்சனை

உடுவில், புதன்

உடுவில் குமரகோட்டம் முருகமூர்த்திகோவில் வருடாந்த மணவாளக் கோல விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது கந்தரோடை பிரம்மஸ்ரீ சு. சிவசுப்பிரமணியக் குருக்கள் முருகப்பெருமானுக்கு நவோத்தரசத சங்காபிஷேகம் செய்து வைத்தார். பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளின் வேதபாராணயத்துடன் ஆறுமுகப்பெருமானுக்கு ஆறு ஆசாரியர்களால் ஷண்முக அர்ச்சனை செய்யப்பட்டது. கற்பூர விழாவும் சிறப்பாகக்கொண்டாடப் பட்டது.

## மாணவர் சுற்றுலா

யாழ்ப்பாணம், வியா.

சிறீருஜ் ஒட்டோமோபைல் என்ஜினியரிங் கல்லூரியைச்சேர்ந்த மாணவர்கள் இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு சுற்றுலாவில் செல்லவிருக்கிறார்கள். அங்கு இவர்கள் மோட்டார்வாகன உற்பத்திச்சாலைகளைப் பார்வையிடுவர்.

## பிணையில் அனுமதி

ஊர்காவற்றுறை புதன்

புங்குடுதீவைச் சேர்ந்த கதிர்காமுப்பிள்ளை அல்லது கதிர்காமநாதன் என்பவர் மீது அவரது மனைவி சிவநேசம் ஜீவனும்சம் கோரித் தொடர்ந்த வழக்கில் கட்டளையை வாங்காது ஒரு வருடம் மறைந்து இருந்ததைத் தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிசார் இவரைக் கைது செய்து நீதிபதி முன் ஆஜர் செய்த போது நீதிபதி எதிரியை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இப்பொழுது நடைபெறுகிறது
கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை)
கிளாஸா (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
லிடோ (பொறளை)
மொடேர்ன் (பதுளை)
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி

மற்றும் பலர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
படகோட்டி

நியூ காலிங்கன் சினிமா
(இணுவில்)
இப்பொழுது திரையிடப்படுகிறது
கூடுவிட்டுக் கூடுபாயும் விந்தைகளும் மந்திர மாயா ஜாலங்களும் இனிய கீதமும், மயிர்க்கூச்செறியும் சண்டைகளும் நிறைந்த
காந்தாராவ், கிருஷ்ணகுமாரி, முக்கமாலா, ராஜ்ஸ்ரீ, லக்ஷ்மி, ரமாதேவி, பாலகிருஷ்ணன்
மற்றும் பலர் நடித்த
வீரத்திலகம்
வசனம் பாடல்கள்: புரட்சிதாசன். டைரக்ஷன்: விட்டலாச்சாரி
[பாஸ்கள், சலுகைகள் ரத்து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் இரு மொழித் திட்டம்

## சட்டசபை அங்கீகரித்தது; எதிர்க்கட்சிகள் வாக்களிக்கவில்லை

### 'என்ன நேர்ந்தாலும் தி. மு. க. இந்தியை ஏற்கமாட்டாது'

—அண்ணா

சென்னை, ஜன. 22

**தமிழகத்தில் இந்தி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழித் திட்டத்தை நீக்கி, தமிழ், ஆங்கிலம் இரண்டையும் மட்டும் கொண்ட இரு மொழித்திட்டத்தை நேற்று தமிழகச் சட்டசபை நிறைவேற்றியது. பின்னர், சட்டசபை திகதி எதுவும் குறிப்பிடாது ஒத்திவைக்கப்பட்டது.**

*தமிழகத்திலுள்ள தேசிய மாணவர் படையில், இந்திக் கட்டளைச் சொற்கள் நீக்கப்படாவிட்டால், தேசிய மாணவர் படையே தமிழகத்தில் கலைக்கப்படுமென சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மொழி பற்றிய தீர்மானம் குறிப்பிட்டுள்ளது.*

இன்னும் 5 ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் மொழியே பயிற்சி மொழியாக மாறவும் இத் தீர்மானம் வழி செய்கிறது.

தீர்மானத்துக்கு தி. மு. க.வுடன் சேர்ந்து சுதந்திரக் கட்சி தமிழரசுக் கழகம் மற்றும் சுயேச்சை அங்கத்தவர்கள் வாக்களித்தனர். எதிர்க்கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், சம்யுக்த சோஷலிஸ்ட் ஆகியன வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அதேநேரத்தில், தீர்மானத்துக்குத் தாம் சமர்ப்பித்திருந்த திருத்தங்களையும் அவை வற்புறுத்தவில்லை.

#### எதிர்க்கட்சி திருத்தங்கள்

மொழிப்பிரச்னையைவிவாதிக்க உயர்மட்டத்தில் ஒரு சர்வகட்சிக் கமிட்டி நிறுவவேண்டுமெனக் கோரும் காங்கிரஸ் தீர்மானத்தை



தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை ஒப்புக்கொண்டபோதிலும், காங்கிரஸ், தனது திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

இந்திய அரசியற் சாஸனத்தில் இந்திமொழிக்கு உயர் அந்தஸ்து அளித்து, மற்ற மொழிகளுக்குத் தாழ்ந்த நிலையை அளிக்கும் ஷரத்துக்கள் நீக்கப்பட்டு, 14 தேசிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிக்கும் வகையில் அரசியற் சாஸனம் திருத்தப்பட வேண்டுமெனக் கோரும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்த மொன்றையும் முதல் மந்திரி ஏற்றுக்கொண்டார்.

#### 14 மொழியும் ஆட்சிமொழி

முதல் மந்திரி திரு. அண்ணாதுரை, தமது ஒன்றரை மணிநேரப் பதிலுரையில் என்ன நேர்ந்தாலும் இந்தியைத் தி. மு. க. ஏற்கமாட்டாது என்று வலியுறுத்தினார். நாட்டின் 14 மொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டுமென்பதே தி. மு. க.வின். கொள்கையாகும் என்றார் அவர். இவற்றில் அகில இந்தியாவுக்குமென ஒரு மொழி தேர்ந்தெடுக்கப்படும் வரை ஆங்கிலமே நாட்டின் தொடர்பு மொழியாக நீடிக்க வேண்டுமெனவும் அவர் கூறினார்.

---

## 'ஆட்சி மொழி மசோதாவை ஒத்திப்போடுக'

### இந்திராவிடம் ராஜாஜி

சென்னை, ஜன. 24

இதற்கிடையில் நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணி வரும், ஆட்சேபத்துக்குரிய இந்தி ஆட்சி மொழிதிருத்த மசோதாவை, நிர்வாக உத்தரவொன்றின் மூலம், தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவரான ராஜாஜி இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



'சுவராஜ்ய' என்ற தமது பத்திரிகையிலேயே ராஜாஜி இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## விநோபாஜியை ஷேக் சந்தித்தார்

பட்னா, ஜன. 24

காஷ்மீர் முன்னாள் பிரதமரும், விடுதலை இயக்கத் தலைவருமான ஷேக் அப்துல்லா, பட்னாவில் நேற்று ஆச்சார்ய விநோபாஜியைச் சந்தித்துப் பேசினார். அவர், பீஹார் முதல்மந்திரியையும் சந்தித்தார்.

---

## ராஜஸ்தானில் எல்லாம் இந்தி

ஜெய்ப்பூர், ஜன. 24

இது இப்படியிருக்க, குடியரசு தினத்திலிருந்து ராஜஸ்தான் அரசாங்க முடிவு யத்தின் சகல நிர்வாக அலுவல்களையும் இந்தியிலேயே நடத்துவதென்று ராஜஸ்தான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

---

## உலகப் பிரச்னைகளையிட்டு டிட்டோ-இந்திரா பேச்சுக்கள்

### இரு நாடுகளும் திருப்தி





புதுடில்லி, ஜன. 24

நேற்று, இந்தியாவுக்குத் தற்போது விஜயம் செய்து கொண்டிருக்கும் யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோவும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் இருதடவை சந்தித்து வியட்னாம், சீனா, மேற்கு ஆசியா பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இரு நாடுகளும், இப்பேச்சுவார்த்தைகளையிட்டுத் திருப்தி தெரிவித்துள்ளன. இந்திய-பாகிஸ்தான் உறவுகளும், இப்பேச்சு வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இரு தரப்பினருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இரு நாடுகளையும் சேர்ந்த உயர்தர ஆலோசகர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை, இருநாட்டு மந்திரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், இந்தியா, ஐக்கிய அரபுக் குடியரசு, யூகோஸ்லாவியா ஆகிய மூன்று நாடுகளுக்குமிடையேயான முத்தரப்பு பொருளாதார ஒத்துழைப்பு, பரஸ்பர நிதி உதவி ஆகிய விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டன.

யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ, இன்றுகாலை போபாலுக்குப் புறப்பட்டுச் செல்கிறார். அவர், மத்திய பிரதேசக் காடுகளில் வேட்டையாடுவார். வேட்டையாடுவது, டிட்டோவின் முக்கிய பொழுதுபோக்கு ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர், நாளை புதுடில்லி திரும்புவார்.

---

## பங்களூரில் தொடர்ந்து இந்தி எதிர்ப்பு போராட்டம்

### பொலிஸ் சுட்டதில் 4 பேர் மரணம்

பங்களூர், ஜன. 24

பங்களூரில், நேற்றுதொடர்ந்து நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மொத்தம் நால்வர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களூரில், நான்கு வேறு வேறு இடங்களில் பொலிசார் 17 தோட்டாக்களைச் சுட்டதாகவும், 4 பேர் உயிரிழந்ததாகவும் பொலிசார் அறிவித்தனர். இரவு 9மணிக்கு, நிலைமை கட்டுக்கடக்கப்பட்டதாகவும் பொலிசார் அறிவித்துள்ளனர்.

நேற்றைய ஆர்ப்பாட்டங்களில், 75 பேர் கைது செய்யப்பட்டனர். பொலிசார், கூட்டத்தினரைக் கலைக்க 230 கண்ணீர்ப்புகைக்குண்டுகளைப் பிரயோகித்ததாக அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர், ஒரு டிரெயிலர் பஸ், பொலிஸ் ஜீப் உட்பட மூன்று அரசாங்க வாகனங்களைத் தீவைத்துக் கொளுத்தினர். [illegible] லியன்களும் 100க்கு மதிகமான பொலிசாரும் [illegible] பட்டதாகவும், 3 சிவிலியன்கள் [illegible] சார் தெரிவித்துள்ளனர்.

---

## அமெரிக்காவின் உளவுக்கப்பலை வடகொரியா கைப்பற்றியது

### மீட்க உதவுமாறு ரஷ்யாவிடம் கோரிக்கை

டோக்கியோ, ஜன. 24.

அமெரிக்க கடற்படை உளவுக் கப்பலொன்றை, வடகொரிய பீரங்கிக் கப்பல்கள், ஜப்பான் கடலுக்கு 25 மைல் தூரத்தில் வைத்துப் பிடித்துள்ளன. இந்த உளவுக் கப்பலில் மொத்தம் 83 பேர் இருந்தனர்.

கப்பலில் ஆயுதம் தாங்கிய வட கொரியர் ஏறிக் கப்பலைச் சூழ்ந்து கொண்டதாகத் தெரிகிறது.

உளவுக்கப்பலைப் பலாத்காரமாக வட கொரியர் வடகொரியாத் துறைமுகமொன்றுக்குக் கொண்டு சென்று வைத்திருப்பதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் வட கொரியாவோ இந்த அமெரிக்க உளவுக் கப்பல் தனது நீர்ப் பிராந்தியத்தில் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகப் புகார் செய்துள்ளது.

#### ஐந்துகப்பல்களில் இது ஒன்று

அமெரிக்காவின் உளவு சேவையில் ஈடுபட்டுள்ள 5 கப்பல்களில் ஒன்றான இந்த 900 தொன் எடையுள்ள உளவுக் கப்பலின் பெயர் 'புப்லோ' என அமெரிக்க பாதுகாப்பு இலாகா தெரிவித்துள்ளது. வடகொரியாத் துறைமுகமான வொன்ஸானில் இக்கப்பல் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு இலாகா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வடகொரியரால் கைப்பற்றப்பட்ட 'புப்லோ' உளவுக்கப்பல் உட்பட அமெரிக்காவின் 5 உளவுக்கப்பல்களும், கம்யூனிஸ்ட் ரேடியோ தொடர்புகளை இடைமறித்து உளவுச்செய்திகள் சேகரிக்கும் வேலைகளில் ஈடுபடுவனவாகும்.

#### கடுமையான விஷயம்

அமெரிக்க உளவுக் கப்பலை வடகொரியர் பிடித்துள்ளதை, 'கடுமையான

[7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வத்தை நம்பு. முழுமனதோடு நம்பு. உலகில் உனக்கினிய தெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும் பொழுதும், நிற்கும்பொழுதும், நடக்கும் பொழுதும், கிடக்கும் பொழுதும் நினை. நானில்லை கடவுளே இருக்கிறரென்று எண்ணு. கடவுளைக் கும்பிடுவதே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். — யோகசுவாமிகள்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹு தை மீ 11௳ (25-1-68

## வியட்னும் பிரச்னை

உலக சமாதானத்துக்கு எச்சமயத்திலும் ஆபத்து ஏற்படுத்தக் கூடியதாக பிரதபிரச்னையாக விளங்கும் வியட்னும் பிரச்னைக்கு ஒரு முடிவு கிடைத்துவிடுமா. உலக அரங்கில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கால் வியட்னும் பிரச்னைக்கு விரைவில் தீர்வுகாணவேண்டுமென்ற அவசியத்தை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொண்டதாகத் தோன்றுகிறது.

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ பாகிஸ்தானுக்கும் கம்போடியாவுக்கும் விஜயம் செய்த பின் இப்போது இந்தியாவில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறர். வியட்னும், மேற்கு ஆசியா மறறும் சர்வதேசப் பிரச்னைகள்பற்றி இந்தியப் பிரதமரும் யூகோஸ்லாவிய அதிபரும் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர் ? தில் வியட்னும் பிரச்னையே முக்கியமாக இடம் பெற்றிருக்கிறது கம்போடியாவுக்குள் வியட்காங்கியர் முகாமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கம்போடியாவுக்குள் அமெரிக்கத் துருப்புகள் நுழைய முன்வந்ததும் இதைததொடர்ந்து கம்போடிய அதிபர் எச்சரிக்கை விடுத்ததும் பின்னர் இந்தியாவிலுள்ள அமெரிக்கத தூதர் திரு. செஸ்டர் போல்ஸ் அமெரிக்க அதிபரின் விசேஷ பிரதிநிதியாகச் சென்று பேச்சுவார்த்தை நடத்தி நிலைமை மோசமாகாமல் சமாளித்ததும் தெரிந்ததே. யூகோஸ்லாவிய அதிபர் கம்போடியா சென்று இளவரசர் நொரடம் சிஹனுக்குடன் ஆலோசனை நடத்தியபின் இந்தியா வந்துள்ளார். இதே சமயம்பிரிட்டிஷ்பிரதமர் திரு. வில்சன் மாஸ்கோவுக்குச்சென்று சோவியத் பிரதமர் திரு. கொஸிஜினுடன் பேச்சுவார்த்தை நடத்த வருகிறர். இப்பேச்சுவார்த்தைகளிலும் வியட்னும் பிரச்னை முக்கிய இடம்பெற்றிருக்கிறது. யூகோஸ்லாவியாவும் இந்தியாவும் எந்த வல்லரசுக் கோஷ்டியிலும் சேராமல் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகள். வல்லரசு முகாம்களாகப் பிரிந்து நிற்கும் நாடுகளுக்கு நிலைமையை எடுத்துக்கூறும் வல்லமை நடுநிலைமை நாடுகளுக்கே உண்டு. இது தவிர இந்த சின கட்டுப்பாட்டுக் மிஷனில் இந்தியாவும் அங்கம் வகிக்கிறது. இந்தோசீனம் சம்பந்தமான 1954-ம் வருடத்திய ஜெனிவா மகாநாட்டுத் தலைமை பிரிட்டனிடமும் ரஷ்யாவிடமும் இருக்கிறது. கட்டுப்பாட்டுக் கமிஷனில் அங்கம் வகிக்கும் மற்று மிரு நாடுகளான போலந்தும், கனடாவும் வியட்னுமில் அமைதியை ஏற்படுத்தும் இந்தியாவின் முயற்சியை நிச்சயம் ஆதரிக்கும் நிலையிலுள்ளன.

இரண்டு நடுநிலைமை நாடுகளின் தலைவர்கள் வியட்னும்பற்றி ஆலோசனை நடத்திவரும் அதே சமயம் ஜெனிவா மகாநாட்டுத் தலைவர்கள் மாஸ்கோவில் ஆலோசனை நடத்திவருகின்றனர். இன்னும் இரண்டொரு தினங்களில் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் இந்தியாவுக்கு விஜயம்செய்து இந்தியப் பிரதமருடன் ஆலோசனை நடத்தவிருக்கிறர். வியட்னுமில் அமைதியேற்படுத்த வேண்டியதன் அவசியத்தை பாப்பரசரும் ஐ. நா. தலைமைக் காரியதரிசியும் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். வடவியட்னும் மீது குண்டு வீசுவதை அமெரிக்கா நிறுத்தவேண்டும் என்று பலரும் கூறுகின்றனர். குண்டு வீச்சை நிறுத்தினல் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக வடக்கு வியட்னும் சமீபத்தில தெரிவித்திருந்தது வியட்னும் கொள்கையால் அமெரிக்க அரசாங்கத்துக்கு, அமெரிக்காவுக்குள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பும் கண்டனமும் வலுப்பெற்று வருகிறது. அமெரிக்க அரசாங்கமும் நிலைமையை உணர்ந்து கௌரவமாகவியட்னுமில் இருந்து விலகிக்கொள்ள விருப்பம் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது.

இப்போது இந்திய, யூகோஸ்லாவிய, பிரிட்டிஷ், ரஷ்ய தலைவர்கள் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் ஒரு நல்ல முடிவுக்கு வழிவகுக்குமென நம்புவோம். நாம் இதே பத்தியில் பல தடவையும் எடுத்துக்காட்டிய, நமது பிரதமரும் தெரிவித்து, யூதாண்ட் வரவேற்றிருக்கும் வியட்னும் பிரச்னைக்கு வியட்னும் மக்களே தீர்வு காணவிடுவதே, சிறந்த பயனுள்ள மார்க்கமாகும் அதாவது அமெரிக்காவும் பிறரும் வியட்னுமிலிருந்து வெளியேறி, பிரச்னையில் சம்பந்தப்பட்ட வடக்கு, தெற்கு வியட்னும் தலைவர்களும் விடுதலை இயக்கத்தினரான "வியட்காங்கியரின்" தலைவர்களும் சந்தித்துப் பேச் வழிவகுக்க வேண்டும்

## விவசாயிகளுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியா. வடபகுதியில் உருளைக் கிழங்கை பயிரிட்டுள்ள விவசாயிகள் உருளைக்கிழங்கை அறுவடைசெய்யும் போது அப்பகுதி விற்பனை சமாசத்திற்கே விற்பனை செய்ய வேண்டுமென்றும் அவ்வாறு விற்பனை செய்யத் தவறியவர்களுக்கும் விற்பனைசெய்ய மறுத்தவர்களுக்கு அடுத்த பயிர்ச் செய்கைக்கான விதை உருளைக்கிழங்கை அரசாங்கம் வழங்கமாட்டாதெனவும் யாழ் மாவட்ட விவசாயப் பகுதியால் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

கள்ள மார்க்கட்டில் உருளைக்கிழங்கு சிக்கிக்கொள்வதைத் தவிர்க்கும் நோக்கமாகவே உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையாளர்கள் தனிப்பட்டவர்களுக்கு விற்காமல் விற்பனவுச் சமாசத்திற்கு விற்கும்படி கேட்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[வி. நி]

## புது வருட நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியாழன் பள்ளப்புலம் ஸ்ரீ முருகன் கூட்டுப் பிரார்த்தனை சபையின வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்

வே. இராசலிங்கம் - தலைவர், பொ. பேரின்பநாயகம் - உபதலைவர் செ. கந்தசாமி-செயலாளர், பொ. கனகநாயகம் - உபசெயலாளர், வே. சிவசுப்பிரமணியம் - தனதிகாரி, வெ காந்தமூர்த்தி - கணக்குப் பரிசோதகர், வே. சிங்கராசா - பண்டவாளர்.

மற்றும் ஏழுபேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## நவீன தையல் பயிற்சி

யாழ்ப்பாணம், வியா. வடமாகாணத்தில் முன்னேற்றமடையாத பின்தங்கிய கிராமங்களின் இளம் பெண்களுக்கு இலவச தையல் கலையை அளிப்பதற்காக தொகுதிகள் தோறும் தெரிவுசெய்யப்பட்ட 11 தையல ஆசிரியர்களுக்கு யாழ் மாவட்ட தையல் மேற்பார்வையாளர் திருமதி ஜி. ஜி ஜெயவீரசிங்கம் விஞ்ஞானரீதியான தையல் பயிற்சிகளை அளித்து வருகிறார். இப்பயிற்சி வகுப்புகள் மத்திய கொககுவில அபிவிருத்திச் சங்கத்தினர் தையல் நிலையத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிறுகைத்தொழில் இலாகாவின் விஞ்ஞான ரீதியான தையல் பாடத்திட்டத்தின் படிஇங்கு பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களுக்கு சுமார் ஒருமாதம் வரை பயிற்சியளிக்கப்படுமென்றும் இவர்களது பயிற்சிக்காலம் முடிவடைந்ததும் ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு தையல் ஆசிரியைசுமார் ஒருவருடகாலத்துக்கு இலவச சேவை அளிக்கவிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது. [வி. நி]

## வீடு தீக்கிரை

ஊர்காவற்றுறை, புதன் சரவணை கிழக்கு வாசியான க. இ. கந்தையா என்பவரின் வீடு சென்ற ஞாயிற்றுக்கிழமை நண்பகல் தீப்பற்றி எரிந்துவிட்டது. தற்செயலாய் ஏற்பட்ட இந்த விபத்தினுல் ரூபா ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ள ...

# தமிழுக்கு யோகமடித்த ...

நண்பர் கடிதத்தில் வருணித்த செந்தமிழ்பூம்பொழிலின் சுகத்தை கடல் கடந்து சென்னைக்குப் போகாமல இங்கு வீட்டிலிருந்தபடியே நானும் ஓரளவு அனுபவித்து மகிழ்ந்தேன். மார்கழி பிறந்தது முதல் இங்கே விடியற்காலையில கோவிலைச் சுற்றிவரும் பஜனைக்கோஷ்டி உஷத்காலத்துப் பறவைகளைப்போல இனிதாகத் துயிலெழுப்பி விடுகிறது. பகலில் மார்கழி நீராட்ட நிகழ்ச்சிகளைக்குவரும் இலக்கிய நண்பர்கள் சந்திப்பும் உரையாடலும். அத்துடன் பகலிலும் இரவிலும் சென்னை விழாக்களின் வானெலி அஞ்சல, திருவெம்பாவை தொடங்கியது முதல் தினமும் வெளிவீதி சுற்றிவரும் நடராஜமூர்த்தியின் ஆனந்த தரிசனம்.

தமிழ்சங்கம் இங்கே தானே சென்ற ஆண்டு ஓகஸ்டில் முழங்கத்தொடங்கிற்று.

ஓகஸ்ட் மாதத்தில்மகோற்சவ ஸீஸன் முடிவடைய கோவில் வீதியிலே மாவை முத்தமிழ் மன்றத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. அதன பின் பாரதியார் குடும்பத்தைச் சேர்ந்த விஜயபாரதியும் அவரது கணவரும் எழுத்தாளர் அழகிரிசாமியும், மட்டக்களப்பிலிருந்து தமிழரசு சொற்கொண்டல் இராசதுரையும் அதிதிகளாக வருகை தந்திருந்த செப்டம்பரில் பாரதி தினமும் அத்துடன் வன்னிய சிங்கம் நினைவு விழவும் தமிழ் காங்கிரஸ் ஆண்டு விழவும் ஒன்றன்பின்ஞென்றய சேர்ந்து கொள்ளவே

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடுகயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்!

ஓசையே கேட்டது. அ...
யூர் கவிஞர் செல்...
வித்துவான் ந.சி. கந்...
பிள்ளை கதாசிரியர் ...
யடி சபாரத்தினம் மூவ...
மறைவும் தமிழ் இல...
உலகுக்குச் சென்ற ஆ...
டில் பெரும் இழ...
மூவரும் நீண்ட கால...
எழுத்திலக்கியத்துக்கு ...
பணி ஆற்றியவர்கள்.

இப்படியாக, பொ...
மிசல பிறந்து மன்னர் ...
யிலே தவழ்ந்த ...
தாய்மொழியானது ...
பிலே வெந்தும் நீ...
மிதந்தும் அதன் கன்...
குன்றுமல் ஆறுயிரம் ஆ...
களுக்கு முன்னிருந்து ந...
பொழுதும் வாழ்வி...
சாவிலும் ஏட்டிலும் ...
டிலும தெருவிலும் ...
லையிலும் நாட்டிலும் ...
ரிலும் பட்டியிலும் ...
டியிலும் அகத்தும் ...
துப் அதுவளர்ந்து ...
ண்டே வருகிறது. சு...
ணந்த பாரதியார் கூற்...
போல் இன்னும் ஐ...
ஆண்டு போதும் அது ...
மொழியாகப் பிரகாசி...
ற்கு தமிழாராய்ச்சி

### அ. செ. மு. எழுதுகிறர்

சில காலமாக சினிமாப் படங்களின் கதை, வசனம் பாட்டு மூன்றையும் முழுத் தொகுப்பாக அப்படியே எடுத்து ஒலிச்சித்திரமாக ஒலிபரப்பி முத்தமிழுக்கும் பணிபுரிந்து வந்த இந்திய வானெலிநிலையத்தார் சென்னையில் தமிழுக்கு யோகமடித்த இந்த ஆண்டு டிசம்பர் ஸீஸனைத் தப்ப விடுவார்களா என்ன? சென்னை இசை விழாக்களையும் அதன் பின் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகளையும் இரவுபகலாக ஒலிபரப்பி நல்ல பெயர் வாங்கி விட்டார்கள், ஒரு தினம் இரவு எம். எஸ். தூண்டிற் புழுவாகத் துடித்தார்; யாழ்ப்பாணம் பத்மநாதனின் குழலோசையில் ஆகாயத் தாமரை மலர்ந்தது. இந்த முருகன்கோயில் முச்சந்தியில் இருந்தே இதெல்லாவற்றையும் பார்த்தேன்.

தமிழ் வெள்ளம் காட்டாருக ஊரெங்கும் கரைபுரண்டு ஓடிற்று வரவேற்புக் கூட்டங்கள், தேநீர் விருந்து நூல்வெளியீட்டு விழா எழுத்தாளர் ஐம்பதாண்டு நிறைவு எழுத்தாளர்கள் மறைவு அவர்களுக்கு நினைவு அஞ்சலிஇலக்கியம்படைத்த எழுத்தாளர்கள் கவிஞர்களுக்கு பரிசு, விருது பாராட்டு என்று எத்தனையோ நிகழ்ச்சிகள்.

பாடையிலே படுத்து ஊர்
சுற்றும் போதும்
பைந்தமிழில் அழும்ஓசை
கேட்க வேண்டும்
—என்றுகிழக்கிலங்கைக்

கவிஞர் ஒருவர் பாடியது போல எழுத்தாளர்கள் மறைவிலும் பைந்தமிழின்

நாடு இன்னும் நா...
ஆண்டுகளுக்குப் பின் ...
தில் நடைபெறப் போ...
தாம். அப்பொழுது அ...
அகில கீர்த்தியைப் பார...
எங்கள் தனிச சிங்...
வெட்கித் தலை குனியா...

சென்னையில் சில இ...
ளின் முன்பாக ந...
பெற்ற தமிழ் எழுத்தா...
சங்கம் கூட தமிழ் நி...
மாக வளர்ந்து வருகி...
அதனை உறுதியாகக் ...
முடியும் என்று இன்...
சர்வதேச இலக்கிய ...
த்தை அலசி ஆரா...
விவாதித்த பின் தீர்ப...
திருக்கிறது வித்து...
கி. வா. ஜகந்நாதனே ...
எழுத்தாளர் சங்கப் ...
மன்ற விவாதத்துக்கு ...
ராகத் தலைமை வகி...

# தமிழே வாழ்வென வாழ்ந்த சுன்னுகம் குமாரசுவாமிப் புலவ...

## இன்று அவர் நினைவுதினம்

தமிழே வாழ்வென வாழ்ந்த ஈழத்து தமிழ்ப் புலவர்கள் பலர் நம்மிடையே வாழ்ந்து, மறைந்து போனுலும், அவர்கள் விட்டுச்சென்ற விலை மதிக்கமுடியாத சொத்துக்கள் அவர்களை மறக்காது நினைவு கொள்ளச்செய்கின்றன இந்தப்புலவர்கள் வரிசையில் ஈழத்திலும், தமிழகத்திலும் செயற்கரிய பல செய்த சுன்னுகத்து குமாரசுவாமிப் புலவரும் ஒருவராக இன்றும் நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறர்.

தென்மொழியையும், வடமொழியையும் கரைத்துக் குடித்து, அதில் பெரும் பாண்டித்தியம்பெற்று சைவத்துக்கும் தமிழுக்கும் நாவலர் காட்டிய பாதையில் பெரும் பணியாற்றினுர்.

கல்விமான்கள் பலரைப் பெற்றெடுத்த உடுவில் தான் புலவரவர்களின் பிறப்பிடம் சிவனின் மெய்யடியார்களான அம்பலவாணபிள்ளை தம்பதிகளுக்கு 1855-ம ஆண்டு ஜனவரி 18-ந் திகதி புலவரவர்கள் பிறந்தார்கள்.

குமாரசாமிப் புலவரவர்களுக்கு ஆரம்பக்கல்வி வீட்டிலேயே வைத்து தந்தையாராலேயே கற்பிக்கப்பட்டது. புலவரவர்கள் முதலில் மல்லாகம் ஆங்கிலப்பாடசாலையில் கல்விபயின்றுர் பின்னர் பாடசாலையை விட்டுவெளியேறியதும், தனிப்பட்ட ஆசிரியர்களிடத்து புலவரவர்கள் கல்வி பயிலலுரர்கள். முருகேச பண்டிதரும் நாகநாத பண்டிதரும் இவருக்குக் கல்வியறிவூட்டியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதன்பின்னர் புலவரவர்கள் தாமுகவே நூல்களைக் கற்கத் தொடங்கினுர். கவிதை, கட்டுரை எழுதத் தொடங்கினுர். சொற்பொழிவாற்றுவதிலும் வல்லுனரானுர். நாவலரும் இவருடைய ஆற்றலைப் பாராட்டியிருக்கிறுர்.

1878-ல் ஏழாலை சைவ வித்தியாசாலை தலைமை ஆசிரியராக புலவரவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதன் பின்னர் எட்டாண்டுகள் கழித்து புலவரவர்கள் சென்னை சென்றுர்கள். இதோபதேசம்

என்ற தனது நூலை செ...
யில் அச்சேற்றினுர்.

இதன்பின்னரும்பலமு...
தமிழகம் சென்று சில ...
டம் தங்கி புலவரவர்...
வந்திருக்கிறுர்கள். புல...
வர்கள் 60க்கு மேற்ப...
செய்யுள் நூல்களை...
வசன நூல்களையும், உ...
நூல்களையும் புலவரவர்...
தமிழ்கூறும் நல்லுல...
துக்கு யாத்துக் கொ...
துள்ளார். மதுரைத் தமி...
சங்கப்புலவர்கள் பார...
டிய ஈழத்துப் புலவர் எ...
பெருமை குமாரசா...
புலவரவர்களுக்குண்டு.

புலவரவர்கள் ப...
வதற்கு இனியவராக, ந...
உள்ளம் படைத்தவ...
வாழ்ந்தார். நகைச்சு...
யாகப் பேசுவா...
புலவரவர்கள் இறக்...
போது அவரு...
வயது அறுபத்தொன்...
புலவரவர்கள் மறை...
நாற்பத்தாறு ஆண்டு...
ஓடிவிட்டன ஆனு...
அவர் நினைவுகள் என...
வாழும் என்பது மட்...
உறுதி.

—பொ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மடித்த ஆண்டு

...சையே கேட்டது. அல்வா
... கவிஞர் செல்லையா
...த்துவான் ந.சி. கந்தையா
...ன்னை சுதாசிரியர் தமிழ
... சபாரத்தினம் மூவரது
...நறவும் தமிழ் இலக்கிய
...லகுக்குச் சென்ற ஆண்
...ல் பெரும் இழப்பு
...வரும் நீண்ட காலமாக
...ழத்திலக்கியத்துக்கு நல்ல
...ணி ஆற்றியவர்கள்.

இப்படியாக, பொருப்
...ல பிறந்த மன்னர் மடி
...லே தவழ்ந்த நமது
...ய்மொழியானது நெருப்
...லே வெந்தும் நீரிலே
...தந்தும் அதன் கன்னிமை
...ன்றுமல் ஆறுயிரம் ஆண்டு
...ளுக்கு முன்னிருந்து நளும்
...பொழுதும் வாழ்விலும்
...விலும் ஏட்டிலும் பாட்
...லும தெருவிலும் திண்
...யிலும் நாட்டிலும் நக
...லும் பட்டியிலும் தொட்
...யிலும் அகத்தும் புறத்
... அது வளர்ந்துகொ
...டே வருகிறது. சுத்தா
...ந்த பாரதியார் கூறியது
...பால் இன்னும் ஐந்து
...ண்டு போதும் அது உலக
...மொழியாகப் பிரகாசிப்பது
...கு தமிழாராய்ச்சி மகா

இப்படித் தீர்ப்பளித்தார்.
"கம்பனது பெருங்காப்
பியம் நமது பாரத நட்டுக்
கவித்துவக் கொள்கைகளுக்
கும் காவியக் கொள்கை
களுக்கும் முற்றும் பொரு
ந்த அவற்றில் சிறந்து மேம்
பட்டு விளங்குவதுடன் எல்
லாக் காலத்திற்கும் எல்லா
இடத்துக்கும் பொருத்த
முள்ள கவித்துவக் கொள்கை
களை வைத்து அளவிட்டு
நோக்கினும் அவற்றுளும்
அது தலைசிறந்து விளங்குகி
றது. இதனால் இப்பெருங்
கவிஞனை உலக மகாகவி
களுள் ஒருவன் எனப்பலரும்
போற்றுகிறார்கள். இவனது
பெருநூலை வான்மீகியின்
மொழிபெயர்ப்புகள் என்று
கொள்ளுதல் சிறிதும்
தகாது."

இவ்வாறு வண்டமிழ்
இயமபும் 1947 டிசம்பர்
கல்விப் பொதுத் தராதரப்
பத்திரப் பரீட்சை வினாத்
தாளிலும் தமிழ் வளர்ந்தது.

சென்ற ஆண்டு நவராத்
திரியின்போது பேரம்பலத்
தார் வீட்டுக்கு செல்லையா
குருக்கள் சென்று ஐந்து
வயதுச் சிறுவனுக்கு ஏடு
தொடக்கி தமிழ் எழுத்து
அறிவித்தபோதும் தமிழ்
வளர்ந்தது

'எத்துக்குமுத்தீர்இழிகுலத்
தனைத்தனை வைக்கப்
பித்துக் கொண்டார்
போல் பிதற்றுவீர்'

என்று முருகப் பெருமானை
குறவர் மடமகள் கடிந்து
கொண்ட கந்தபுராண
பாடலுக்கு தெல்லிப்பழை
குகசர்மா நால் மணிநேரம
கோவிலிலே விளக்கவுரை
நிகழ்த்தியபோதும் தமிழ்
வளர்ந்தது ஆண்டுதோறும
வளர்ந்தது.

'வழிபடுவேன் ஆசார
சீலராய் வழமை போல
ஆமம்
விதித்த இடங்களில்
நின்று வழிபாடு செய்க'

என்ற அறிவித்தலையும்
தாண்டிக் கொண்டு ஐரோப்
பிய உடையுடனே கோவி
லுக்குள் நுழையும் வெளி
நாட்டவரை மாவிட்டபுரம்
கோவில் குருக்கள் உள்ளே
அழைத்துச் சென்று கோவி
லைச் சுற்றிக் காண்பித்துக்
கொண்டே 'The divine
child was embellished with
many an ornament Thanddi
Kazal and little rattle bells
for the ankies. He would
wander in public places
gardens and oves hills என்று
இங்கலீசு வெளுத்துக்கட்
டியபோதும் தெய்வத்தமிழ்
மொழி வளர்ந்தது.

கோவில் மேளம் நாரா
யணசாமி முருகன் கோவி
லில் வெள்ளிக்கிழமை
தோறும் நாயனக்காரர்
வசித்த மல்லாரிக்கு தி
கிணதோம் அடிக்கபோதும்
தமிழ் நாதவடிவாக டோம்
டோம் எனத் தெருவெல்
லாம் முழக்கம் செய்து
கொண்டே வளர்ந்தது முரு
கன் கோவிலில் அல்லாமல்
வேறு எந்தக் கோவிலி
அது இப்படி வளரப் போகி
றது?

Proud in his victory Murugan strode the battlefield alone like the lion which is the Lord of the Forest - என்று திருமுருகாற்றுப்
படையை நம்மவர்கள் ஆங்
கிலத்தில் மொழிபெயர்த்து
உபதேசம் கூறிய போதும்
எங்கள் தமிழ் வளர்ந்தது.

இப்படியாக மக்கள்
பேசும் மழலையிலும் கிளி
யின் நாவிலும் கள்ளமறு
குருக்கள் கூறும் கருணை
வாசகத்திலும் கூலிக் கத
திலும் கொற்றவையிலும்
கோயிலிலும் பரிகாசத்
திலும்கூட ஏழ்கடல் உடைத்
தபோதும் தன் மணமே
வீசி நாளொருமேனி

யும் பொழுதொரு
வண்ணமுமாக அது வளர்
ந்தது. வளர்ந்து இன்பமே
வடிவாகிடப் பெற்ற கன்
னித் தமிழ் வளருவதைத்
தவிர வேறு ஏதுமறியாத
மொழி அல்லவோ நமது
தாய்மொழி. (முற்றும்)

## ...எழுதுகிறார்

...டு இன்னும் நான்கு
...ண்டுகளுக்குப் பின் ஈழத்
...ல் நடைபெறப் போகிற
...ம், அப்பொழுது அதன்
...கில கீர்த்தியைப் பார்த்து
...ங்கள் தனிச சிங்களம்
...வட்டித் தலை குனியாதா?
...சென்னையில் சில தினங்க
...ன் முன்பாக நடை
...பற்ற தமிழ் எழுத்தாளர்
...ங்கம் கூட தமிழ் நிச்சய
...க வளர்ந்து வருகிறது.
...தனை உறுதியாகக் கூற
...டியும் என்று இன்றைய
...வதேச இலக்கிய வள
...தை அலசி ஆராய்ந்து
...வாதித்த பின் தீர்ப்பளித்
...ருக்கிறது வித்துவான்
... வா. ஐகணுதனே இந்த
...ழுத்தாளர் சங்கப் பட்டி
...ன்ற விவாதத்துக்கு நடுவ
...கத் தலைமை வகித்து

# ...வாழ்ந்த ...ப் புலவர் ...தினம்

...ற தனது நூலை செவ்வை
...ல் அச்சேற்றினர்.

இதன்பின்னரும்பலமுறை
...மிழகம் சென்று சில வரு
...ம் தங்கி புலவரவர்கள்
...திருக்கிறார்கள். புலவர
...கள் 60க்கு மேற்பட்ட
...ய்யுள் நூல்களையும்,
...ன நூல்களையும், உரை
...களையும் புலவரவர்கள்
...மிழ்கூறும் நல்லுலகத்
...க்கு யாத்துக்கொடுத்
...ள்ளார். மதுரைத் தமிழ்ச்
...கப் புலவர்கள் பாராட்
...ஈழத்துப் புலவர் என்ற
...ருமை குமாரசாமிப்
...வரலவர்களுக்குண்டு.

...புலவரவர்கள் பழக
...ற்கு இனியவராக, நல்ல
...ள்ளம் படைத்தவராக
...ழ்ந்தார். நகைச்சுவை
... கப் பேசுவார்
...வரவர்கள் இறக்கும்
...போது அவருக்கு
...து அறுபத்தொன்பது.
...வரவர்கள் மறைந்து
...ம்பத்தாறு ஆண்டுகள்
...விட்டன ஆனாலும்
...வர் நினைவுகள் என்றும்
...ழும் என்பது மட்டும்
...து.

—ப்ாமா

## இன்றைய பலன்

[25-1-68]
வியாழக்கிழமை
[தை மீ 11 வ]

நட்சத்திரம்- அனுஷம் மாலை 5-10மேல்கேட்டை

திதி- தசமி, காலை 7-13 மேல் துவாதசி

சுபநேரம்- 8-05—9-35.

ராகுகாலம்- 2-05—3 35.

இன்று பிறந்தவர்களுக்கு: சகோதர சுகத்துக்கு இடமுண்டு. பூமிப் பிணக்குத் தான்றியும் சமரச முடிவே ஏற்படும். பந்துக்கள் வழியால் ஆதரவு பெருகும். எண்ணியது கிடைப்படினும் இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடியும்.

மேஷம்- பாதையில் தடை, பார்த்து நீ நட.
ரிஷபம்- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்
மிதுனம்- முயற்சியில் தளர்ச்சி, முன்னேற்றம் தடைப்படும்.
கடகம்- பிதாவழிப் பொருள், பெருமையும் சேரும்.
சிம்மம்- கைத்தொழில் விருத்தி, காரிய ஜெயம்.
கன்னி- புதுப் பொருள் வரவு, பூமி லாபம்.
துலாம்- அடுத்துக் கெடுப்பர், அடக்கமே நன்று.
விருச்சிகம்- மக்கள் பிணி, மனப் போராட்டம்.
தனுசு- போதுமென்ற மனம, பொருள் வரவு
மகரம்- ஆசை வைக்காதே, அவதிப்படாதே.
கும்பம்- அன்னையின் ஆசி, அனைத்திலும் வெற்றி.
மீனம்- புதல்வர்கள் உதவி, பூரண அமைதி.

— சோதிடகலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## ஆபத்தான நிலையில் பாடசாலை

அச்சுவேலி, புதன்

அச்சுவேலி பத்தமேனி இராதிதினேஸ்வரி வித்தியாலயக் கட்டிடம் மிகவும் சீர்கேடான நிலையிலிருக்கிறது.

இக் கட்டிடத்தின் மேல் கூரை வேலைகள் 1930-ம்வருடத்தில் செய்யப்பட்டதாம இப்போது கூரை தாங்கும் வளைகள் சீர்கேடடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் எந்நேரத்தில்சரிந்துவிடுமோ என்ற நிலையிலுள்ளது.

இவ்வித நிலையால் இப்பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் எந்நேரமும் ஆபத்தான சூழ்நிலையை எதிர் நோக்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

கல்லூரிகட்டிடத்தின் இவ்வித ஆபத்தான நிலை குறித்து இங்குள்ள ஆசிரியர்களும் மாணவரும் பெற்றோர்களும் பெரிதும் கவலை கொண்டுள்ளார்கள்.

இக் கல்லூரி கட்டிடத்தைச் சீர் செய்து தரும்படி கோப்பாய் எம். பி. திரு. ...திர வே... ...வேண்டு... ...டுள்ள

# கூட்டுக்கல்வி - நன்மையா, தீமையா?

இலங்கையில் மறுபடியும் கூட்டுக் கல்வியை நிற்பாட்டப்போகிறார்களாம். அதாவது ஆண்களும், பெண்களும் சேர்ந்து ஒன்றாகக் கலவன் பாடசாலைகளில் கல்வி பயிலாமல், இனிமேல் ஆண்களுக்குத் தனி பெண்களுக்குத் தனி என்று பாடசாலைகளை அமைக்கப்போகிறார்கள்.

இந்தத் திட்டம் நன்மையானதோ தின்மையானதோ என்று பலர் பலவித அபிப்பிராயங்கள் தெரிவிக்கலாம்.

இதைப் பற்றி ஓர் இளைப்பாறிய கல்லூரி அதிபரின் கருத்து என்னவென்று கேட்டேன். அவர் சொன்னார்:-

"ஆண்—பெண் குழந்தைகளை ஆரம்ப அரிச்சுவடி வகுப்பிலிருந்து அவர்கள் சுமார் பத்து அல்லது பதினொன்று வயது வரும்வரை (அதாவது பூப்பருவமடைந்து பாலுணர்ச்சி வேற்றுமை தெரியும்வரை) ஒன்றாகப் படிப்பிக்கலாம் பின்னர் ஓர் ஐந்துவருடகாலம் அவர்களைத் தனித்தனி பாடசாலைகளில் படிப்பிக்க வேண்டும். ஏனென்றால் இந்த இடைக்காலத்தில் தான் அவர்களுக்கு ஆண்—பெண் என்ற பாலுணர்ச்சி தலைதூக்கும். இந்த ஐந்து வருடகாலம் முடிந்த பின் அவர்கள் ஆண்—பெண் உறவு முறைகளில் முதிர்ச்சி அடைந்துவிடுவார்கள் அப்புறம் மறுபடியும் ஆண்களையும் பெண்களையும் ஒன்றாகப் படிப்பிக்கலாம்."

இது ஒரு நல்ல முறைதானென்றாலும் செயல்முறையில் சாத்தியப்படுமோ என்பது சந்தேகமாயிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி ஆரம்பக் கல்லூரிகள், நடுநிலைக் கல்லூரிகள், உயர்நிலைக் கல்லூரிகள் என்று மூன்றுவகைக் கல்லூரிகளை அமைக்கவேண்டும்.

சிறுவர்—சிறுமிகளைச் சிறுவயதிலிருந்தே ஒருமிக்க வளர்த்து, படிப்பித்து வந்தால் அவர்களுக்கு விபரீதமான எண்ணங்கள் தோன்றமாட்டா என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து விபரம் தெரிந்த வயதில் அவர்கள் இயற்கையாகவே பாலுணர்ச்சியால் தூண்டப்படுகிறார்கள். இது தான் கொடிய பருவம் இப்பருவம் தாண்டிவிட்டால் ஆண்களும், பெண்களும் முதிய பருவமடைந்து ஒழுக்கமாக நடக்கத் தலைப்படுவார்கள்.

கூட்டுக் கல்வி முறையில் மாணவர்களைவிட சில ஆசிரியர்களே தவறு விட்டுவிடுகிறார்கள் என்றும் ஒரு குறைபாடு உண்டு இதிலும் ஓரளவு உண்மை உண்டென்பதில் சந்தேகமில்லை.

ஆண்களும் பெண்களும் ஒன்றாகக் கல்வி பயிலாத அந்த நாட்களில் வேறுபல விபரீதங்களும் விளைந்துண்டு அதை இங்கு சுட்டிக் காட்டாமலே பலர் அறிவார்கள். கூட்டுக்கல்விமுறையில் அவை துப்புரவாக மறைந்து விட்டது ஓர் ஆச்சரியம்.

இப்படியான நிலையில் எது நல்லது, எது கூடாது என்று திட்டவட்டமாகக் கூறுவது கடினம்.

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

## "காங்கேசன்துறையில் கண்ணாடி தொழிற்சாலை நிறுவ முடியும்"

### உடுப்பிட்டி எம். பி. கருத்து

உடுப்பிட்டி, புதன்

"தற்போதைய நிலையில் வல்லிபுரக் கோவிலில கண்ணாடித்தொழிற்சாலை நிறுவுவது சாத்தியமில்லை. கண்ணாடியை கூடுதலாக பாவிக்கும் மிடங்களிலேயே தொழிற்சாலைகளை அமைப்பது உசிதமாகும். பிறநாடுகள் மூலப்பொருளான மணலை இறக்குமதிசெய்தே கண்ணாடியை ஏற்றுமதி செய்கின்றன. ஆதலால் இலங்கையிலும் துறைமுகங்களுக்கு அருகிலேயே இத்தொழிற்சாலையை நிறுவி வல்லிபுரக் கோவிலிலிருந்து மணலை ஏற்றிச் செல்லாம் காங்கேசன்துறை துறைமுகமாக்கப்பட்டால் காங்கேசன்துறையில் கண்ணாடித் தொழிற்சாலை நிறுவ முடியும்."

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

"கைத்தறி நெசவுசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை லக்சலாவும், கூட்டுறவு விற்பனவு நிலையங்களும் வாங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கவிருக்கின்றேன். உள்ளூரில் கிளைகளை அமைத்து அவற்றின் மூலம் துணிகளை நெசவு நிலையங்கள் விற்பனை செய்வதற்கும் வசதிசெய்து கொடுப்பேன்.

பிறநாட்டுப் பொருட்களை மக்கள் விரும்பாமல் செய்வதின் மூலமே கள்ளக்கடத்தலைத் தடுக்கலாம் இத்துறையில் கடமையாற்றும் அதிகாரிகள் நேர்மையானமுறையில் நடந்துகொண்டால் கள்ளக்கடத்தல் எப்போதோ ஒழிக்கப்பட்டிருக்கும் வல்வெட்டித்துறையில் மட்டும் கள்ளக்கடத்தல் நடைபெறுவதாக எண்ணுவது தவறாகும். காலி, தெகிவளை, கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களில் கடத்தல் பெருமளவில் நடைபெறுகின்றது. வடபகுதியில் தடுப்புமுகாம் கள் அமைக்கப்பட்டுப்பொலி... ...அவ... ...வது பாரபட்சமானசெயலாகும். தடுப்புமுகாம்போடப்பட்டு ஒரு முறை கடத்தல் பிடிபட்டால் அவ்வழியால் மீண்டும் கடத்தல் நடைபெறும் என எண்ணுவது அறிவீனம்.

உடுப்பிட்டி எம். பி. தொடர்ந்து கூறுகையில், இங்கிருந்து இந்தியாவிற்கு அரிசி கள்ளக்கடத்தல் செய்யப்படுகிறது என்பது வீண் பிரச்சாரமாகும். இந்தியாவில் அரிசி மலிவாகக் கிடைக்கையில் இங்கிருந்து விலை விஷம்போல ஏறியுள்ள அரிசியை எவரும் கடத்திச்செல்லமாட்டார்கள். பொதுமக்கள் திடசங்கற்பம் பூணுவார்களேயானால் சட்டவிரோத செயல்கள் முற்றாக மறைந்துவிடும். எந்தரகத் துணிகளை மக்கள் அதிகம் விரும்புகிறார்களோ அந்த ரகத்துணிகளை இலங்கையில் உற்பத்திசெய்ய அரசாங்கம் திட்டமிடவேண்டும் என்றும் சொன்னார்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா.

யாழ். கச்சேரி நலன்புரி சங்கத்தின் ஆதரவில் வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. எஸ். அம்பிகைபாகன் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு என்னும் பொருள் பற்றி இன்று மாலை அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார். மாவட்ட காணி அதிகாரி திரு. எஸ். சிவஞானம் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

## பஜனை

அளவெட்டி, புதன்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கீரிமலை சிவன்கோவில் பஜனைக் குழுவினர் இம் மாதம் 28-ம் திகதி கீரிமலை சிவன்கோவிலில் இருந்து இலங்கையிலுள்ள பலபுனித ஸ்தலங்களுக்கு செல்ல இருக்கிறார்கள்.

இப்பஜனைக் குழுவில் நூற்றுக்குமதிகமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

## ஒருவாரத்தில் 500 பேருக்கு வடக்கில் வயிற்றுளைவு

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியின பல பாகங்களிலும் வயிற்றுளைவு நோய் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாகச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்

கடந்த ஒரு வாரத்தில் யாழ்ப்பாணம அரசினர் ஆஸ்பத்திரியில் மட்டும் சுமார் 500 பேர் வயிற்றுளைவுக்குச் சிகிச்சை பெறச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அண்மையில் இங்குபெய்த மழை காரணமாக குளங்களிலும், பள்ளமான காணிகளிலும் தேங்கி நின்ற அழுக்கு நீரிலும் பார்க்கால் நடைகளே வயிற்றுளைவு நோய் பரவ முக்கிய காரணமாக இருக்கலாம் என டாக்டர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். தொற்று நோயுள்ள ஆடு, மாடு போன்ற கால் நடைகளை இறைச்சிக்காகப் பாவித்து கடைகளில் விற்பதாகவும், இதனைப் பொது மக்கள் வாங்கிச் சாப்பிடுவதாலுமே இந்நோய் அதிகமாகப் பரவி வரலாமெனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறைச்சிக்காகப் பாவிக்கப்படும் கால் நடைகளை சுகாதாரப் பகுதி பரிசோதகர்கள் பரிசோதனை செய்து உத்தரவு வழங்குவது சம்பந்தமான பல அபிப்பிராய பேதங்களை பொது மக்கள் சுகாதார இலாகாவுக்குத் தெரிவித்துள்ளனர் கால் நடைகளை பரிசோதனை செய்து இறைச்சிக்குப் பாவிக்க வழங்க வேண்டிய பொறுப்பை அரசாங்கத்தில் பயிற்சி பெற்ற மிருகவைத்தியர்களிடம் வழங்குமாறும் இதனால் தொற்றுநோயுள்ள கால் நடைகள் இறைச்சிக்காகப் பயன் படுத்தப் படமாட்டாதெனவும் பலர் சுகாதாரப் பகுதியினரைக் கேட்டுள்ளனர்.

[கா. நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி, புதன்

''கடந்த ஒன்றரை வருட காலமாக நெல்லியடி மக்களுக்குச் சேவைசெய்து பலரின் அன்பையும், பாராட்டையும் பெற்று, எம்மை விட்டுப் பிரிந்துசெல்லும் திரு. மாணிக்கவாசகருக்கு மக்கள் அளிக்கும் பிரிவுபசாரவிழாவில் கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தமையை ஒரு பெருமைக்குரியதாகக் கருதுகிறேன். பொதுமக்களுடன் அன்பாகப் பேசி, அவர்களின் குறைகளை உடனுக்குடன் போக்கியதன் மூலம் அனைவரது அன்பையும் சம்பாதித்துக் கொண்டார். அன்பினால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை திரு. மாணிக்கவாசகர் நிரூபித்துக் காட்டிவிட்டார். தனக்குக் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுடன் சகஜமாகப் பழகி உத்தியோகத்தர்களுக்கும், பொது மக்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தினார். வெறும் அரசாங்க அதிகாரியாக மட்டுமிராது பல இன்னல்கள், பொறுப்புக்கள் ஏற்பட்ட போதிலும் மனம் தளராது நெல்லியடிப் பட்டினசபை, கட்டைவேலிக் கிராமசபை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பல முன்னேற்றங்களைச் செய்வதில் தனிப்பட்ட முறையிலும் செயல்புரிந்தார்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும், யாழ் மாநகரசபை, நெல்லியடிப் பட்டினசபை, கட்டைவேலிக் கிராமசபை ஆகியவற்றின் விசேஷ ஆணையாளராகவும் கடமையாற்றி கொழும்பிலுள்ள உள்ளூராட்சித் தலைமைக்காரியாலயத்திற்கு இடமாற்றம்பெற்றுச் செல்லும் திரு. சி. சி. மாணிக்கவாசகருக்கு நெல்லியடிப் பட்டின வரியிறுப்பாளர்கள் அளித்த பிரிவுபசார விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

விழா ஆரம்பமாவதற்குமுன் நெல்லியடியிலுள்ள நவீன மத்திய சந்தை முன்றலிலிருந்து திரு. மாணிக்கவாசகர், உடுப்பிட்டி எம். பி., புதிய ஆணையாளர் திரு. எஸ். ...... ஆகிய மூவரும் ஊர்வலமாக விழா நடைபெறும் மத்திய நூல்நிலைய மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர். நெல்லியடிப் பட்டின நகரசுத்தித் தொழிலாளர்கள் கோலாட்டம், கும்மி. மேளவாத்தியங்களுடன் தமது குதூகல வரவேற்பைத் தெரிவித்தனர்.

ஆசிரியர் திரு. சி. வைத்திலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார் அல்வாயூர் மு. செ. விவேகானந்தம் வாழ்த்து மடலை வாசித்தளித்தார். உடுப்பிட்டி எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

# 'மக்கள் குறைகளை உடனுக்குடன் தீர்ப்பவர்'

## திரு. மாணிக்கவாசகருக்கு உடுப்பிட்டி எம். பி. பாராட்டு

''திரு மாணிக்கவாசகர், கடமையுணர்ச்சி மிக்கவர் என்பதை நான் நேரில் அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கிடைத்தது. அதிலிருந்து அவரது தியாக உள்ளத்தை நான் நன்கு அறிந்துகொண்டேன். பொதுமக்களின் நன்மைக்காகக் கட்சிபேதமில்லாதவராக இருந்த பெருமிலும் அரசியல் தலைவர்களுடன் உறவாடி நன்மைகளைச் செய்தார். நம் இருவருக்கிடையிலும் பல சிக்கல்கள் சில சூழ்நிலைகளில் ஏற்பட்டதுண்டு. ஆனால் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் இருந்ததினால் அதிக சேவைகளைச் செய்யமுடிந்தது. நெல்லியடிப் பட்டினசபை பல வருடங்களாக சாதிக்க முடியாமலிருந்த பலவற்றை தனது பதவிக்காலத்தில் சிரமங்களுக்கிடையிலும் செய்தார். கரவெட்டியில் தாய்மாரும், இளம் பெண்களும் குடிநீரின்றி அவதியுறுவதை காணச் சகியாமல், 40 ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும் ஏதோவொரு தடையினால் நிறைவேறுபவிருந்த அந்த அத்துளுக் குழாய்நீர் திட்டத்தை அமுலாக்குவதற்கு அமைச்சரைச் சம்மதிக்கவைத்தார். வாழ்க்கையிலும், எடுத்துக்கொண்ட துறையிலும் பின்வாங்காது முன்னேறியவர்களுக்கு திரு மாணிக்கவாசகர் ஒர் உதாரணமாக விளங்குகின்றார்.''

நெல்லியடிப் பட்டினசபையின் முன்னாள் உப-தலைவரான திரு எஸ். ஜெயசிங்கம் பேசுகையில் ''நாட்டில் தேசியஒற்றுமை நிலவிவரும் இக்காலத்தில் பட்டினசபையின் 7 அங்கத்தவர்களுக்கிடையிலும் ஒற்றுமையின்மையால் நகரசபை பிளவுபட்டு, விசேஷ ஆணையாளர் பொறுப்பேற்ற பொழுது என்னத்தைச் சாதிக்கப் போகிறாரெனச் சந்தேகித்தேன் இன்று இப்பட்டினம் அடைந்துள்ள துரித முன்னேற்றம் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. ஆணையாளர்கள் நிர்வாகம் சரிவர நடக்குமேயானால் மாவட்டசபைகளும் வேண்டியதில்லை'' என்று கூறினார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ் ஸி.மாணிக்கவாசகர் நன்றி தெரிவித்துப்பேசுகையில் கூறியதாவது:—

நெல்லியடிப்பட்டினசபை ஊழியர்களின்கடும் உழைப்பின்பயனாகவே இப்பட்டினம் குறுகிய காலத்தில் துரித அபிவிருத்தியடைந்துள்ளது. இப்பட்டினசபை அங்கத்தவர்களுக்கிடையே ஒத்துழைப் பில்லாமையினாலேயே கலைக்கப்பட்டது. நிர்வாக ஊழல்கள் இங்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை எனது நிர்வாகம் வெற்றி பெறவும், நாடு முன்னேறவும் ஆண்டவன் அருளை. ஊழியரின் விடாமுயற்சியும் பொறுமையும் உடுப்பிட்டி எம். பி.யின் ஒத்துழைப்பும் உற்சாகமுமே மூலகாரணமாக விளங்கின யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இரு நூல் நிலையங்களை நிறுவ அமைச்சு முடிவு செய்தபோது இப்பகுதி மாணவர்களின் கல்வி வசதிகள்குறைவாக இருந்ததினால் நூல் நிலையத்தில் ஒன்றை இங்கு நிறுவத் தீர்மானித்தேன். இதனால் மக்கள் பெரும்பயனடைந்துள்ளனர். இளைஞர்கள் மலைபோல் வரினும்

[7-ம் பக்கம் பார்க்க

வியட்னாம் மீதான

# ரஷ்ய- பிரிட்டிஷ் கருத்து வேற்றுமைகள்

## குறைந்துள்ளதாக வில்சன் அறிவிப்பு

மாஸ்கோ, ஜன 24

வியட்னாம் மீதான பிரிட்டிஷ், சோவியத் கருத்து வேற்றுமைகள் வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தற்போது ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹரால்ட் வில்சன் கூறியுள்ளார். நேற்று இங்கு அவருக்கு அளிக்கப்பட்ட பகல் விருந்தொன்றில்பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

அவ்விருந்தில் கலந்துகொண்டு பேசிய ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் வியட்னாம் சம்பந்தமான அமெரிக்கா கொள்கையை குறை கூறியதாகச் சொல்லப்படுகிறது.

பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்சன், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு பிரெஷ்னெவ்வுடன் நேற்று ஈடுபட்டிருந்தார்.

# நெற்பயிர் செய்கையாளருக்கு ஓர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

வடமாகாண நெற்பயிர்ச் செய்கையாளர்களுக்கிடையேயான விவசாயப் போட்டியில் பங்கு பற்றியுள்ள விவசாயிகளின் வயல்களை மதிப்பீட்டாளர்கள் சென்று பார்வையிட்டு வருவதாகவும், நெல் அறுவடை செய்துகொண்டிருக்கும் விவசாயிகள் மதிப்பீட்டாளர்கள் வராவிட்டால் விவசாயப் பகுதிக்கு அறிவித்தல் கொடுத்த பின்னரே அறுவடையைப் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ் மாவட்ட விவசாயப்பகுதியின் அதிபர் திரு. என். ஜெயசீலன் நெற்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் திறமையான நெற்பயிர்ச் செய்கையாளர்களைப் பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்தி பரிசுகள் வழங்கும் நோக்கமாகவே அரசாங்கம் வருடாவருடம் இப்போட்டியை நடத்தி வருவதாகவும் சென்ற வருடம் நெற்பயிர்ச் செய்கையைச் சிறந்த முறையில் அதிக விளைச்சலைப் பெற்ற நெற்பயிர்ச் செய்கையாளர்களுக்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சியில் பரிசில்கள் வழங்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்ற வருடம் யாழ் மாவட்ட விவசாயப்பகுதியினரால் நடத்தப்பட்ட ...... பயிர்ச் செய்கையாளர் போட்டியில் வலிகாமம் மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம் சரவணமுத்து ஓர் ஏக்கரில் 129 புசல் நெல்லை விளைவித்து முதலாவதாகவும், கிளிநொச்சியைச் சேர்ந்த திரு. என். கே. நல்லதம்பி 119 புசல் நெல்லை விளைவித்து இரண்டாவது இடத்தையும், வலிகாமம் கிழக்கைச் சேர்ந்த திரு. என். எஸ். சுப்பிரமணியம் 116 புசல் நெல்லை விளைவித்து மூன்றாவது இடத்தையும் பெற்றனர்கள். [வ. நி.]

## சூதாடியவர்களுக்கு அபராதம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நகன் சங்கரன், சடையன் நடராசா, பிரான்சிஸ், சின்னையா, பிலிப்பன் ஆகியோருக்குச் சூதாடிய குற்றத்திற்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் பத்து ரூபா அபராதம்விதித்தார்.

## தற்கொலை

ஊர்காவற்றுறை, புதன்

காரைநகர் பலாவோடை வாசியான தம்பர் மகள் சேதுப்பிள்ளை [வயது 80] கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை அதிகாரி திரு சந்தசாமி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். சமீபகாலமாக ...... தம்மைப் ...... தெரிவிக்கப்பட்டது.

# கொலைக்குற்றம் சுமத்தி மூவர் மீது வழக்கு

குரும்பசிட்டி, புதன்

இவ்வருடம் தைமாதம் 14-ந் திகதி சங்கானை நிச்சாமத்தைச் சேர்ந்த வல்லிபுரம் செல்லமுத்து என்பவர் சந்தைக்கு அதிகாலையில் சென்றுகொண்டிருக்கையில் துப்பாக்கிச் சூடு பட்டு கத்தி வெட்டுக்கு இலக்காகியும் கொலை செய்யப்பட்டுள்ளதை யடுத்து சங்கானைப் பொலிஸார், பாலன் பசுபதி, வலனியன் சின்னத்தம்பி, ஆறுமுகம் தியாகராசா, ஆகிய மூன்று பேர் மீது கொலைக் குற்றம் சுமத்தி மல்லாகம் நீதிபதி திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இக் கொலையுடன் சம்பந்தப்பட்ட தடயப் பொருள்களை அரசாங்க ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்க சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஸிடவன் விண்ணப்பித்தைத் தொடர்ந்து நீதிபதி அனுமதியளித்தார். சங்கானைப் பொலிஸ் சார்ஜண்ட் லாந்தல நீதிபதி முன்னிலையில் சாட்சியமளித்தார்.

எதிரிகள் மூவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டநீதிபதி வழக்கு மேல் விசாரணையை இம்மாதம் 26ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் சிவ. சிறீதரன் ஆஜரானார்.

## மாதர்சங்க தலைவி

யாழ்ப்பாணம், வியா

மத்தியகொக்குவில் மாதர் சங்கத் தலைவியாகவும் மத்திய கொக்குவில் மாதர்சன சமூக நிலையத் தலைவியாகவும் திருமதி சத்தியா சுந்தவனம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொக்குவில் கிராமப்பெண்களின் கலாச்சார பொருளாதார முன்னேற்றத்தில் அதிக அக்கறையோடு உழைத்தாரென்றும் அவரது தன்னலமற்ற சேவையை கொக்குவில் பெண்கள் அடையவேண்டுமென்பதற்காகவே இவ்விரு பதவிகளையும் அளித்துள்ளதாக இங்கூட்டங்களில் அவருக்கு பாராட்டு வழங்கப்பட்டது. [வி நி]

## கோவிலில் திருட்டு

ஊர்காவற்றுறை. புதன்

புங்குடுதீவு கானிகோவிலில் 900 ரூபா பெறுமதியான குத்துவிளக்கு மற்றும் திருப்பணி பொருட்களும் களவாடப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின்மீது திருவாதிரை, இராசலிங்கம், இராசையா ஆகியோரை ஊர்காவற்றுறைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

## பொறுத்தது போதுமாம்

யாழ்ப்பாணம், வியா.

தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி விடுத்த காலக்கெடுவை கட்சித் தலைமைப் பீடம் இனியும் பின்போட முடியாதென்றும், இதுவரை வாலிபர்கள் பொறுத்திருந்ததே போதுமென்றும் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் செயலாளர் திரு. எஸ். அருணாசலம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

வாலிப முன்னணியினரை இன்னும் பொறுத்திருக்குமாறு கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் விடுத்த அறிக்கையொன்றை ஆராயும் பொருட்டு வாலிப முன்னணியின் உப குழுவொன்று நேற்றுக் கட்சிக் காரியாலயத்தில் அவசரமாகக் கூடி நிலைமையை ஆராய்ந்தது.

இக் கூட்டத்தைத் தொடர்ந்து வாலிப முன்னணிச் செயலாளர் திரு அருணாசலம் விடுத்த அறிக்கையில் ஜனவரி 26-ல் மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படா விட்டால் கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து விலக இனியும் தயங்கக் கூடாது என்பதை வாலிப முன்னணி மீண்டும் நினைவூட்டுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். [கா' நி]

## மேலதிக உதவிகள்

கொழும்பு, புதன்

திட்ட அமைப்புப் பொருளாதாரத்துறை நிர்வாகப் பகுதி, இவ்வருடம் கடந்த வருடங்களிலும் பார்க்கக் கூடிய உதவிகளை வெளிநாடுகள் இலங்கைக்குச் செய்யப்போவதாகத் தெரிவித்திருக்கிறது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**வியாழன் 25-1-68**

**செய்திகள்:** காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.


**364 மீற்றர் & 61 மீற்றர்** 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**364 மீற்றர் & 49 மீற்றர்** பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**364 மீற்றர் & 61 மீற்றர்** மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு — லீலாவதி இரத்தினசிங்கம், 6-45 பா வளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 குங்குமம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-30 புல்லாங்குழல் — ரீ. கங்காதரன், 10-00 நேயர்விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். உதைபந்தாட்டச் சங்க போட்டி பாதியில் நிற்கிறது

— நமது விளையாட்டு நிருபா —

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வந்த யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையேயான" லீக் சுற்றுப்போட்டி சமீபத்தில் நடந்த மேற்படி சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவில் 14 கழகங்கள் வெளிநடப்புச் செய்த பின்னர், தொடர்ந்து நடைபெறாமல் பாதியில் தடைப்பட்டிருப்பது ரசிகர்களிடையே பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் அளித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருந்த மேற்படி சங்கத்தின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நிகழ்ச்சி நிரலின்படி அங்கு பார்க்கச் செல்லும் ரசிகர்கள் இதனால் ஏமாற்றத்துடன் செல்ல வேண்டியிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களை ஊக்குவித்து அவைகளுக்கிடையேயான போட்டிகளையும், விளையாட்டுப் பயிற்சிகளையும் பாரபட்சமின்றி வழங்குவதற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட யாழ்ப்பாண உதை பந்தாட்டச் சங்கம் தனது நோக்கத்தைச் செயல் படுத்தாமல் சங்கத்தில் முக்கிய இடம் வகிப்பது யார் என்றபோட்டிப் பிரிவினையில் இறங்கியிருப்பது யாழ்ப்பாண உதைபந்தாட்ட ரசிகர்களிடையே பெரும் கவலையையும் இச் சங்கத்தில் ஒரு பிரிவினையையும் அளித்துள்ளதாகத் தெரிகிறது.

சங்கம் எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் இப்போது அசட்டை செய்யப்பட்டு வாக்குப்பலம் ஒன்றே முக்கிய நோக்கமாகக் கொண்டு சங்கம் பிளவு பட்டிருப்பதாகவும், இதனால் வருடா வருடம் ஆரம்பத்தில் விளையாட்டுத்துறை அபிவிருத்தியில் இருந்த அக்கறையும் உற்சாகமும் குன்றியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

புதிய புதிய விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு பல விளையாட்டுக் கழகங்களுக்கு இடம் கொடுத்து அவற்றுக்கு சங்கத்தின் அங்கத்துவ உரிமையையும், வாக்குரிமையையும் அளித்து ஊக்கப்படுத்தினால் தான் மேலும் பல கழகங்கள் உருவாக வழி பிறக்குமென்றும் இதற்கு யாழ். உதைபந்தாட்டச்சங்கம் பிளவு பட்டு போட்டி மனப்பான்மையுடன் இருக்காமல் ஐக்கியப் பட்டு உழைக்க வேண்டுமென்றும் விளையாட்டுத்துறையில் ஆர்வம் கொண்டுள்ள ஒரு பிரமுகர் தெரிவித்துள்ளார்.

## நீர்வேலி வென்றது

நீர்வேலி, புதன்

வலிகாமம் கிழக்கு விளையாட்டுக்கழகச்சங்கம்நடாத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மூன்றாவது ஆட்டம் சென்ற 21-ந் திகதி நீர் வலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய விளையாட்டுக்கழகத்துக்கும் ஊரெழு விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெற்றது.

இடைவேளைக்கு முன்னர் ஸ்ரீ சுப்பிரமணிய விளையாட்டுக்கழக வீரர்கள் திறமையுடன் விளையாடி ஒரு கோலைப் போட்டுக் கொண்டனர். இடைவேளைக்குப் பின்னர் இரு கோஷ்டியினரும் திறமையுடன் மோதினர். எனினும் ஸ்ரீ சுப்பிரமணிய விளையாட்டுக்கழகக் கோஷ்டியினர் தொடர்ந்து நான்கு கோல்களைப் போட்டு அமோக வெற்றி ஈட்டினர் இப்போட்டிக்கு திரு. க. இராசேந்திரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கமத்தொழில் சேவைப்பகுதி காரியாலயத்தில் கடமையாற்றி வந்த திரு. ரி. எஸ் கனகசபை இம்மாதம் 20-ந் திகதி முதல் கொழும்புக்கு ஓடிற் சுப்ரீண்டனகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வெற்றி தோல்வி இல்லை

உடுவில், புதன்

உடுவில் குருக்கெட்கழகமும் ஸ்டார் விளையாட்டுக் கழகமும் கூட்டாகச் சேர்ந்து உடுவில் தெரிவுக் கோஷ்டியுடன் ஆடிய உதைபந்தாட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

உடுவிலில் நேற்று மாலை நடைபெற்ற இவ்விளையாட்டில் இருபக்க கோஷ்டியும் பலம் மிசகவையாக விளங்கின. தெரிவுக் கோஷ்டிக்கு கோல்போடும் சந்தர்ப்பங்கள் நிறைய இருந்தும் கூட எதிர்க்கோஷ்டி கோல்காப்பு வீரர் திரு எம். வீரசிங்கத்தின் திறமையால் அவைகள் முறியடிக்கப்பட்டன.

எவரும் கோல் போடாததால் விளையாட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. திரு. எம். பத்மநாதன் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## அமெரிக்கா......

(3-ம் பக்க தொடர்ச்சி)

விஷமமாக' அமெரிக்காவுக்கு துவதாக அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன்ரஸ்க் அறிவித்துள்ளார். உளவுக் கப்பல் கைப்பற்றப்பட்ட செய்தி, அமெரிக்க ஜனாபதி திரு ஜோன்சனிடம் துயிலெழுப்பித்தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மக்கள்...

[6-ம் பக்க தொடர்ச்சி]

கொண்ட கொள்கையை கைவிடாது நடப்பதேஎனது இலட்சியமாகும்.

## ஒருவருடத்தில் குழாய் நீர்

சாவெட்டி மக்கள் இன்னும் ஒருவருடத்தில் குழாய் மூலம் குடிநீர்வசதி பெறுவர். இங்குநிறுவப்பட்டுள்ள மத்திய சந்தை மூலம் வருமானமாகக் கிடைக்கும் பத்தாயிரம் ரூபாவும் வீதி திருத்தங்களுக்கே செலவிடப்படும். நெல்லியடி மக்கள் பழக இனிமையானவர்கள் அன்புள்ளம்படைத்தவர்கள் நான் எங்கு சென்றாலும் என் நினைவில் இப்பகுதி மக்களும் என்றென்றும் நிலைத்து நிற்பர்.

புதிய உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் பேசுகையில் மாணிக்கவாசகர் விட்டுச் சென்ற கடமைகளை அவர் வழியில் நின்று செயலாற்றுவேன் என உறுதியளிக்கிறேன் நானும் இதே ஊரைச் சேர்ந்தவன்எனச் சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன் என்று கூறினார்.

மற்றும் கரைச்சி கி. ச. தலைவர் திரு. வீ ஆனந்தசங்கரி, முன்னாள் கரைச்சி கி. ச. உறுப்பினர் திருமதி பறுவதம் வைத்திலிங்கம், வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. எம். சினித்தம்பி, முன்னாள் நெல்லியடி ப. ச. உறுப்பினர் திரு. சி. தாமோதரம்பிள்ளை உட்பட வேறும்பலரும் பேசினர்.

திரு மயில்வாகனம் நன்றி கூறினார்.


எல்லோரும் விரும்புவது ! எங்கும் கிடைப்பது !!

# பீ. வீ. எம். ஒரென்ஜ் பீடிகளே!!!

பீடி உலகில் இன்று
தனக்கென ஒரு தனி இடத்தை
பெற்றுக்கொண்டு மிக வேகமாக
மக்கள் மனதில் தனது
பெயரை நிலைநாட்டி வருபவை

பீ. வீ. எம்.
ஒரென்ஜ் பீடிகளே.




அளவு கடந்த காரமோ
அதிக மென்மையோ
இல்லாமல் புகைத்து
பூரண திருப்தி காண
பொருத்தமான காரம்
புகை பிடிப்போரில் பெரும்பாலோர்
விரும்பும்
கணக்கான காரம்.

ஆகையினால்தான்
பீடி பிரியர்கள் இன்று ஒரென்ஜ் பீடிகளையே கேட்டு வாங்குவதும் தமது ஞாபகத்தில் வைத்திருப்பதும்
ஒரென்ஜ் பீடிகளே!

தயாரிப்பாளர்கள்

P. V. M. ஒரென்ஜ் பீடி கம்பெனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மானில்

# ஐ. அ. கு. வெளியுறவு மந்திரி ரியாட்

## மன்னர் ஹுசெயினுக்கு நாஸரின் விசேஷ செய்தி

பெய்ரூட், ஜன. 24 ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவு மந்திரி திரு முகம்மது ரியாட் அம்மான் வந்து சேர்ந்துள்ளார். ஜனாதிபதி நாஸரிடமிருந்து ஒரு விசேஷ செய்தியை அவர் ஜோர்தான் மன்னர் ஹுசெயினிடம் கையளிப்பார்.

அம்மான் செல்லமுன்னர் திரு. முகம்மது ரியாட், பெய்ரூட்டில் லெபனன் தலைவர்களுடன், மேற்கு ஆசியாவில் அரபு நாடுகள் மேற்கொள்ளவேண்டிய கொள்கை நிலைபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

முன்னதாக, அவர், டமாஸ்கஸில் சிரியாத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். ஆனால், அரபு உச்சி மாநாடொன்று பற்றியோ அல்லது மேற்கு ஆசியாவில் அரபு நாடுகள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியோ சிரியாவின் கருத்துக்களை அவரால் மாற்றமுடியவில்லையெனத் தெரிகிறது.

மேற்கு ஆசியப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணுமுகமாகச் சில நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கத்துடன் மேற்குஆசியாவிலுள்ள ஐ. நா. விசேஷ பிரதிநிதி டாக்டர் ஜாரிங், இஸ்ரேல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்திவருவதையொட்டி, இந்த நிலைமையில், அரபு நாடுகளின் கொள்கை நிலை என்ன என்பதை ஆராய்ந்து ஒருமுகப் படுத்துவதற்காகவே ஐ. அ. குடியரசு வெளியுறவு மந்திரி அரபு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவில் கடமையாற்றிய அரசாங்க எழுதுவினைஞர் சங்க முன்னுள் செயலாளரான திரு. மு. மருதபிரான் அடுத்த அடுத்தமாதம் 1-ம் திகதி முதல் அனுராதபுரம் காணி அபிவிருத்திப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [கா. நி.]

---

## பொலிஸ்அதிகாரி திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா.

காங்கேசன் துறைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டனின் திடீர் இடமாற்றத்துக்கு இலக்காகியுள்ளார்.

இம்மாதம் 1-ம் திகதி காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இவர் இப்போது மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [கா. நி.]

---

## இத்தொழில் மீது கண்ணோட்டம்.

யாழ்ப்பாணம். வியா

யாழ்ப்பாணத்தில் லைசென்ஸ் இல்லாமல்கள்ளச் சாராயம் விற்கும் தொழில் இடத்துக்கிடம் துரிதமாக முன்னேறி வருவதாக பொலிசாருக்குத் தகவல் எட்டியதைத் தொடர்ந்து காரையூர்ப் பொலிசார் கள்ளச்சாராயம் விற்பவர்களைப் பிடிக்கும் முயற்சியில் தீவிர கவனம் செலுத்தியுள்ளார்கள்.

லைசென்ஸ் இல்லாமல் சாராயம் விற்பனை செய்ததாக காரையூர்ப்பொலிஸ்சார் பழைய பூங்காவீதியைச் சேர்ந்த ஒருவரை யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். எதிரியைக்குற்றவாளியாகக் கண்டமாஜிஸ்திரேட் எதிரிக்கு 50 ரூபா அபராதம் விதித்தார்.

யாழ்-நகரைச் சேர்ந்தஒருவரையும் லைசென்ஸ் இல்லாமல் கள்ளச் சாராயம் விற்றதாக காரையூர்ப் பொலிசார் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்தனர்.

விசாரணையின் பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் 50 ரூபா குற்றம் விதித்தார். [வி, நி]

---

வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

---

கிரிக்கெட் டெஸ்ட்

## ஆஸ்திரேலியா வென்றது

பிரிஸ்பேன், ஜன. 25 நேற்று முன்தினம், 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 177 ஓட்டங்களை எடுத்திருந்த இந்தியா, நேற்றைய தினம், தேநீர் இடைவேளைக்குச் சற்று பின்னதாக, மொத்தம் 355 ஓட்டங்கள் பெற்று, தனது 2-வது இன்னிங்சை முடித்துக் கொண்டது. ஆகவே, ஆஸ்திரேலியா, மூன்றுவது டெஸ்டையும் 40 ஓட்டங்களால் வென்றது

இந்தியாவின் இரண்டாவது இன்னிங்சில், அபிட் அலி-47, பட்டோடி நவாப்-48, சூர்த்தி-64, போர்டே-63, ஜெய்சிம்மா-101 ஆகியோர் திறமையாக ஆடியும், இந்த டெஸ்டை இந்தியா வெல்ல முடியாது போனது துரதிர்ஷ்டமே

முழு விபரங்களும் பின்வருமாறு:

ஆஸ்திரேலியா

1-வது இன்னிங்ஸ் 379.

2-வது இன்னிங்ஸ் 294.

இந்தியா

1-வது இன்னிங்ஸ் 279.

2-வது இன்னிங்ஸ் 355.

முதல் இரண்டு டெஸ்ட்களையும், ஆஸ்திரேலியாவே வென்றிருந்தது, இப்போது மூன்றுவது டெஸ்டையும் அது வென்றுள்ளது. கடைசியும், நான்காவதுமான டெஸ்ட் நாளை வெள்ளிக்கிழமை சிட்னியில் ஆரம்பமாகிறது.

---

இந்தியாவில்

## பத்திரிகையாளர் வேலைநிறுத்தம்

புதுடில்லி, ஜன. 24 பாரதத்தின் பல பாகங்களிலுமுள்ள பத்திரிகை ஸ்தாபனங்களில் தொழில் புரியும் உழைக்கும் பத்திரிகையாளர்களும், பத்திரிகையாளர் அல்லாத ஊழியர்களும் இன்று உள்ளிருப்பு அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள்.

உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர் அல்லாத ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு போர்டு செய்துள்ள ஊதிய உயர்வு சிபார்சுகள் அமுல்நடத்தப்படவேண்டும் என்றும் கோரி இவர்கள் இந்த வேலைநிறுத்தம் செய்தனர்.

---

## விலையுயர்ந்த சேலைகள் சிக்கின

இமையாணன், புங்கை

பொலிகண்டியில் இன்று காலை வல்வெட்டித்துறை பொலிசார் நடத்திய வேட்டையில் 87 விலையுயர்ந்த சேலைகளும், 14 பழையகாட் சாரங்களும் சிக்கின.

வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு, ஐ. விஜயதிலகா தலைமையில சென்ற பொலிஸ் கோஷ்டி பொலிகண்டியைச் சேர்ந்த ஒருவீட்டைத்திடீர் சோதனையிட்டபோது, விலையுயர்ந்த இந்த சேலைகளும், சாரங்களும் சிக்கியதாம்.

இதுசம்பந்தமாக செல்லன், கதிரமலை என்ற இரு சகோதரர்களை பொலிசார் கைதுசெய்தனர், பொருட்கள் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டன.

---

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவு விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்கும், ஊர்காவற்றுறை 'யங்ஸ்ரார்ஸ்' விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் புங்குடுதீவு 4—1 கோல்களால் வெற்றிபெற்றது. ஊர்காவற்றுறையில் நிகழ்ந்த இந்த விளையாட்டிற்கு திரு. ஜே. ஏ. பேடினன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த விழா

திங்கட்கிழமை [29-1-68] காலை 9 மணிமுதல் வழக்கம் போல் கொண்டாட்டம் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும். பி. ப. 2-30 வருடாந்தப் பொதுக் கூட்டம்.

பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. தியாகராசா

கௌரவ செயலாளர்.

யா. இ. க.

25-1-68 41

---

## மரண அறிவித்தல்

காலம்சென்ற கு. கந்தையாவின் பாரியாரும், பாலசிங்கம், நவரட்ணம், தங்கச்சி அம்மா, அருணகிரி ஆகியோரின் தாயாரும், கனகரத்தினம், திருமதி பாலசிங்கம், திருமதி இந்திரா நவரட்ணம், திருமதி தங்கேஸ்வரி அருணகிரி ஆகியோரின் மாமியாரும் ஆகிய செல்லமுத்து சிவபதமடைந்துவிட்டார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 25-1-68 காலை 10 மணியளவில் சோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

10, [illegible] வீதி, [illegible] 22

---

# எதிர்ப்பு பிரசாரம் நடத்த ஆயத்தம்

யாழ்ப்பாணம், வியா.

மாவட்டசபை மசோதாவை எதிர்த்து தொகுதி ரீதியாசப் பிரசாரக் கூட்டங்கள் நடாத்த தமிழ்க் காங்கிரஸ்வாலிப முன்னணி தீர்மானித்துள்ளது

முதலாவது எதிர்ப்புக்கூட்டத்தை பெப்ரவரி6-ந்திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்த வலிப முன்னணி யாழ்ப்பாணக்கிளை ஏற்பாடுசெய்துள்ளது. இக்கூட்டங்களில் தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டசபை மசோதா பற்றிவிளக்கிக்கூறுவார்கள்.

பாராளுமன்றத்தில் மாவட்டசபை மசோதாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்று, தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணி நேற்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு தந்தி யான்றை அனுப்பியுள்ளது

மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக வாக்களித்த பின்னர் தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டுமா? வேண்டாமா? என்பதுபற்றி வாலிப முன்னணி இம்மாதம் 31-ந் தேதி கூடி ஆராயுமாம். (நி.)

---

# 'தமிழரசுக் கட்சியிலிருந்து வாலிப முன்னணி விலகாது'

## வாலிப முன்னணி செயலாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், வியா.

"தமிழ்பேசும் மக்களிடத்திலும் தமிழரசுக் கட்சியிலும் பிளவுகளை ஏற்படுத்த முனையும் பிழுகர்கள் தமிழரசுவாலிபர்களுக்குள்ளும், பிரிவினை உண்டாக்கி தமிழினத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை தமிழரசு வாலிபமுன்னணி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழரசு வாலிபர்களைக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்துபிரிக்க நினைப்பவர்கள் நிச்சயமாக ஏமாற்றம் அடைவார்கள்.

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிப் பொதுச் செயலாளர் திரு. ந. அருணாசலம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்".

அவர் மெலும் கூறியிருப்பதாவது:

எமது வாலிப முன்னணி அமரர் வன்னியசிங்கம் விட்டுச்சென்ற பணிகளை அதே ரீதியில் செயல்படுத்த எத்துணை இன்னல்கள் வரினும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்குமே தவிர கட்சியிலிருந்து விலகுவதோ அல்லது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கோ இலட்சியங்களுக்கோ குரோதமாகச் செல்லும் நோக்கம் வாலிபமுன்னணிக்கு இல்லை.

வாலிபமுன்னணி சிலஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இதன் முதற்படியாக கட்சியின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் பொருட்டு, வாலிப முன்னணி உறுப்பினர் அடுத்த வாரம் திருமலைக்குச் செல்வர்.

அண்மையில் பரபரப்பை உண்டாக்கியுள்ள அடையாள அட்டை மசோதா வரும் பட்சத்தில் தமிழரசுக்கட்சி அதை நுணுக்கமாக பரிசிலனை செய்து பொதுச்சபையின் அங்கீகாரத்திற்கு விட்டு, தமிழினத்திற்குப் பாதகமில்லாத வகையில் நடந்துகொள்ளுமென நம்புகிறோம். (கா. நி.)

---

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, புதன்

காரம்பன் தெற்கு வாசியான அம்பாள் செல்லத்துரை என்பவரை தூசித்ததாகவும் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியதாகவும் அவமானப்படுத்தியதாகவும், நாரந்தனைக் கிராமசபை உறுப்பினரான விசுவலிங்கம் தியாகராசா அவரது மனைவி ருக்மணி ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சென்ற வாரம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் நீதிபதி திரு. ஜமீல் எதிரிகளை விடுதலை செய்தார். எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு. விசுவநாதன் ஏற்பட்டிருந்தார்.

---

## 'பகிஸ்கரிப்பு'

திருகோணமலை, புதன்

அரசாங்கம்எங்களைப்புறக்கணிக்கும்போது அதன் காலை வருடிக் கொண்டிருப்பதை தான் ஆதரிக்கவில்லை. எமது முக்கிய பிரச்னைகள் இதுவரை தீர்க்கப்படாதது மிகவும் வருந்தக்கூடியது.

திருகோணமலை நகரசபை தலைவர் டாக்டர் எஸ்.சிவானந்தன் இங்கு நடந்த கூட்டத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது! இச் சபையின் மூன்று முக்கிய கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றுவிடில் தான் சுதந்திரதின விழாக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன்.

திரு. பி. நேமிநாதன் கூறியதாவது: திருகோணமலை நகரசபை தலைவருக்குதிருகோணமலையில நடைபெறும் சுதந்திரதின விழா நிகழ்ச்சிகளில் உத்தியோக பூர்வமாக இடமளிக்கப்படததுதிருமலைமக்களை அவமதித்த செயலாகும். நகரபிரதாதன் நகரத்தின் முதல் பிரைஜை அவர்தான் பிரதமர்கவர்னர் ஜெனரல், மற்றும் முகிய பிரமுகர்களை வரவேற்க்க வேண்டும். விழாவிற்கு குறுக்கே நிற்க மாட்டோம். ஆனால் தமிழ் பேசும் மக்கள் இவ்விழாவில் கலந்துகொள்ளக் கூடாது.

---

தெல்லிப்பளை கி. ச

## கூட்டம் நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், வியா.

தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் மீது நம்பிக்கையில்லையென மேற்படி கிராமசபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இப்பிரேரணையைப் பற்றி விவாதிப்பதற்கான விசேட கூட்டம் நேற்றுநடைபெறவிருந்தது. தவிர்க்கமுடியாத காரணங்களால் இக்கூட்டம் நடைபெறவில்லையென்றும் இக்கூட்டத்திற்கான திகதிமீண்டும் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்படுமெனவும் தெரியவருகிறது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு ஜனவரி மாதம் 25-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org